உ

சிவமயம்

"பண்புடை யார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்"



"சிந்தனைச் சிற்பச் செல்வர்"

# ச.த. சின்னத்துரை ஜே.பீ. அவர்களின்

# 100வது ஜனன விழா - 2003 மலர்

கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் பாதங்களில் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய ராஜகோபுர முகப்புத் தோற்றம்
அமரர் அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தனது இறைபணியை இக் கோவில் வாயிலாக மேற்கொண்டு வந்தார். அருகே காணப்படுவது கப்பித்தாவத்தை சிவன் ஆலய ராஜகோபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்தனைச் சிற்பச் செல்வர்

**அமரர் ச.த. சின்னத்துரை ஜே.பி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** *021-2222870*

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

---

அன்பு நெஞ்சத்தீர்,

நீத்தார் நயப்பு நூற்றாண்டு நிறைவு மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அமரர் சின்னத்துரை அவர்கள் வாழும் காலத்தில் மாமனிதராக வாழ்ந்து அரிய பல சேவைகளையாற்றி இந்நாட்டின் தருமத்திற்கு தனியானதொரு முத்திரையைப் பதித்துக்கொண்டவர். யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக்கொண்டு முருகபக்தராக வாழ்ந்தவர். பல பொது நிறுவனங்களின் பணிகளிலும் சமய சமூகப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர்.

ஆதீன வளர்ச்சியிலும் பல தடவைகள் உதவிபுரிந்தவர். தமிழினத்திற்குத் தனியானதொரு நாட்காட்டி வேண்டும் என்ற வகையில் லீலா பஞ்சாங்க நாட்காட்டியை வெளியிட்டு அக்குறையைத் தீர்த்தவர். இன்று நூறு வயதினை அடைந்திருக்க வேண்டிய சின்னத்துரை அவர்கள் விட்டுச் சென்ற பணியை அவரின் புதல்வர்கள் செய்வது மகிழ்ச்சிக்குரியது. இதனை வள்ளுவரும்

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

எனக் கூறியுள்ளார்.

இன்று தந்தையின் நூறாவது வயதினை நினைவு கூர்ந்து மலர் ஒன்றினை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது. இன்றும் தந்தையின் நினைவை மறவாது இப்படியொரு நினைவு மலரை வெளியிடுவது ஏனையோருக்கு உதாரணமாக அமைகின்றது. சின்னத்துரை தனபாலா அவர்களும் ஏனைய சகோதரர்களும் வள்ளுவர் நெறியில்

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்"

எனத் திகழ்வது போற்றுதற்குரியது.

அமரர் அவர்களின் புதல்வர்களின் குடும்பங்களை இறைவன் ஆசீர்வதிப்பானாக.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
*(Ceylon Branch)*
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 588253*
*075 513805*
*Fax - 588253*

# வாழ்த்துச் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவப் பெருமானது வாக்கிற்கிணங்க, சீரும் சிறப்போடும், பலரது மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரியராக வாழ்ந்து மறைந்த அமரர் உயர்திரு சண்முகம் தம்பையா சின்னத்துரை அவர்களது நூற்றாண்டு நினைவாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அக்காலத்தில் மஹாத்மா காந்தியடிகள் தொடங்கி நடாத்தி வந்த கதர் இயக்கத்தினால் மிகவும் ஈர்க்கப்பட்டு, தன் வாழ்நாள் முழுதும் கதர் ஆடையே உடுத்து வந்தார் அமரர் திரு சின்னத்துரை அவர்கள் என்பதை அறியும்போது அவர் ஓர் இலட்சிய மனிதர் என்பதை அறியமுடிகிறது. "காந்தி சின்னத்துரை" என மக்கள் அழைக்கும் அளவிற்கு அவர் கதர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது திருமணத்தில் மணமக்கள் உட்பட உற்றார் உறவினர், நண்பர்கள் சிலரும் கதராடை உடுத்தினர் என்றும், ஏன் கூறைகூட "கதர்" ஆகத்தான் இருந்தது என்றும், எனவே அவரது திருமணமே "கதர்த் திருமணம்" என்று அழைக்கப்பட்டதாக அறியும்போது அவர் மீது எவர்க்குமே மதிப்பு ஏற்படுவதில் ஆச்சரியமில்லை.

மனிதன் தன் விதியைத் தானே அமைத்துக் கொள்கிறான். ஒருவனது உயர்வுக்கும், வீழ்ச்சிக்கும் அவனே காரணகர்த்தா. ஆனால் எத்தனை பேர் வாழ்க்கையிலே நன்கு உழைத்து முன்னேறுவதற்கான ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், அவர்களை விரல்களால் எண்ணி விடலாம். அப்படிப்பட்ட ஒரு சிலருள் சிறப்புடன் வாழ்ந்தவர்தான் இந்த நூற்றாண்டு விழா நாயகன் அமரர் திரு. சின்னத்துரை அவர்கள்.

சுவாமி விவேகானந்தர் கூறுவார். "துரதிஷ்டவசமாக, மக்களில் பெரும்பாலானோர் எந்தவிதமான உயர்ந்த இலட்சியமும் இல்லாமல், இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ அல்லது தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக ஏதோ பேய், பிசாசு என்று கற்பித்துக்கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்துங் கிடக்கிறது. தன் கடமைகளைத் தவறாமல் ஒழுங்காகச் செய்து கொண்டு, தன்னால் ஆனவரை வாழ்க்கையில் முயன்று கொண்டிருப்பவன் கட்டாயம் ஒளியைக் காண்பான்.

அமரர் திரு சின்னத்துரை அவர்கள் எங்ஙனம் நன்கு உழைத்து படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறினார்கள் என்பதை அவரது வாழ்க்கைக் குறிப்பிலிருந்து அறியும்போது, மேற்கூறிய சுவாமி விவேகானந்தரது கூற்றுக்கு அவர் எங்ஙனம் ஒரு உதாரண புருஷராக விளங்குகிறார் என்பதைக் காணலாம். ஆனால் வெறும் பொருள் திரட்டுவதே அவரது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கவில்லை என்பதை அவரது பன்முகப்பட்ட சேவைப் பணிகள் உணர்த்துகின்றன. சமய, சமூகத்துறைகளில் அவர் ஆற்றிய பணிகள் இன்றும் பலரால் பாராட்டப்படுகின்றன. மது ஒழிப்பு இயக்கத்திற்காக அவர் ஆற்றிய பணிகள், தீண்டத்தகாதவர் கோயிலுக்குள் சென்று வழிபட அவர் மேற்கொண்ட முயற்சிகள், தொழிலாளர் நலனுக்காக அவர் மேற்கொண்ட இயக்கப் பணிகள், தான் பிறந்து வாழ்ந்த காங்கேசன்துறை ஊர் மக்களின் நன்மைக்காக "பரஸ்பர நன்மை விருத்திச் சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர் ஆற்றிய பணிகள் என்பன என்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும்.

இத்தகைய பெருமை மிக்க ஒருவருக்கு நூற்றாண்டு விழா காண்பது மிகப் பொருத்தமானதே. விழா சிறப்புடன் அமைய வாழ்த்துவதோடு, அவர் விட்டுச் சென்ற பணிகளை ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்லும் அவரது குடும்பத்தினருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா

(சுவாமி ஆத்மகனானந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா
பிரதம குருக்கள் – சமாதான நீதவான்
சிவாகம திலகம் – சிவாகம பூஷணம்
தலைவர் – ஸ்ரீ ராம கான சபா
தலைவர் – அகில இலங்கை சிவப் பிராமண சங்கம்
ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி கோவில்
11/9, கப்பித்தாவத்தை, கொழும்பு – 10
தொலைபேசி கோயில் : 687111
வீடு : 693922

*Brahmmashri B. Shanmugaratna Sarma*
Chief Priest - Justice of The Peace
Sivakama Thilagam - Sivakama Bhooshanam
President : Shri Rama Gana Sabha
President : All Ceylon Siva Brahmana Sabha
Sri Bala Selva Vinayaga Moorthy Temple
11/9, Captain's Garden, Colombo - 10
Telephone Temple : 687111
Residence : 693922

# ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு

சிந்தனைச் சிற்பச் செல்வர், லீலா நிறுவனங்களின் ஸ்தாபகர், 32 ஆண்டுகள் ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் – அமரர் ச. த. சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு விழா விநாயகப்பெருமாண் திருவருளால் இனிதே நடைபெறுகிறது.

1935 ஆம் அண்டில் இருந்தே அவரை எனக்கு நன்கு தெரியும். அவரது குடும்பத்தில் நானும் ஒருவனாகவும், எனது குடும்பத்தில் அவரும் ஒருவராகவும் இணைந்து பழகி பல வருடங்களாக வாழ்ந்துள்ளோம்.

மலிபன் வீதி, சென் செபஸ்தியன் வீதி, பண்டாரநாயக்க மாவத்தை போன்ற இடங்களுக்கெல்லாம் – லீலா அச்சகம் இடமாற்றம் அடைந்த போது ஒவ்வொரு புதிய இடத்திலும் விநாயகர் பூசை செய்து அவரது தொழில் பெருகும்படி ஆசீர்வதிக்குமாறு விநாயகப்பெருமானை வேண்டிக்கொண்டேன்.

அவரது பிள்ளைகளின் திருமணங்களை நடத்தி வைக்கும் பெருமை எனக்குக் கிடைத்தது. இதனைத் தவிர அலரது இல்லத்தில் நடைபெறும் எந்தவொரு நற்காரியத்தையும் நானே முன்னின்று நடத்தி வைப்பது வழக்கம். எனது மனைவியாரும் அமரர் சின்னத்துரையின் குடும்பத்தினரும் சகோதரர்கள் போலவே பழகிக் கொண்டனர்.

சின்னத்துரை அவர்களின் தாயார் யாழ்ப்பாணத்தில் காலமான சமையம், என்மீது இருந்த விசுவாசத்தின் காரணமாக அவரது தாயாரின் கிரியைகளை நானே செய்ய வேண்டும் என்றுகூறி இங்கிருந்து தெல்லிப்பளைக்கு அழைத்துச் சென்றவர்.

1948 ஆம் ஆண்டு ஸ்ரீ பாலசெல்வவிநாயகர் ஆலய பரிபாலன சபையில் அங்கத்தவராகச் சேர்ந்த காலம் தொடக்கம் சகல துறைகளிலும் ஒத்துழைப்பு வழங்கி விநாயகப் பெருமானுடைய ஆலய வளர்ச்சியில் முன்னின்று உழைத்த பெரியாராவார். ஆலய கும்பாபிஷேகங்களின் போது அருந் தொண்டு புரிந்தலர், உபயகாரர் இல்லாத சகல திருவிழாக்களும் அவரது பெயரிலேயே நடைபெற வேண்டும் என்று நடத்தி வந்துள்ளார்.

வாழ்க்கையில் நடுநிலையை அறமாகக் கொண்டு வாழ்ந்தவர். எல்லோரிடத்திலும் அன்புடனும் பண்புடனும் பழகியவர். அத்தகைய அமரர் சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புடன் இனிதே நடைபெற வாழ்த்துகின்றேன்.

விக்கினம் தீர்த்துக் கருணை புரியும் விநாயகனை
அக்கர சோதியை கப்பித்தாவத்தையில் அஞ்சலிப்போம்

பா. சண்முகரத்தினசர்மா
பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ச. த. சின்னத்துரை ஊக்கத்தின் உறைவிடம்

சென்ற தலைமுறையினரான திரு. சின்னத்துரை அவர்கள் இன்றிருந்தால் (23-07-2003) நூற்றாண்டை எட்டிப்பிடித்திருப்பார். காலஞ் சென்ற திரு. சின்னத்துரை அவர்களை நான் முதன் முதலில் சந்தித்தது அவரின் நியூ லீலா அச்சகத்தில். சென் செபஸ்டியன் வீதியில் இருந்த அவரின் அச்சகத்திற்கு சட்ட மாணவனாக சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் சென்றிருந்தேன். வெள்ளை உடுத்த அவரின் மலர்ந்த சிரிப்பு இப்பொழுதும் நினைவிருக்கிறது.

அவர் காரியத்தில் கண்ணாக இருந்து அதே நேரத்தில் சுவாரஸ்யமாகப் பேச்சுக் கொடுப்பார். சட்டத்தரணியாக புதுக்கடையில் கடமை ஆற்றிய காலத்தில் ஆங்காங்கே அவரைச் சந்தித்து இருக்கிறேன். அவரின் சுறு சுறுப்பு, உழைப்பு, ஊக்கம் அத்துடன் சிந்தித்துச் செயலாற்றும் அவரின் திறன் யாவையும் என்னைக் கவர்ந்தன. ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் உறைவிடமாக அவர் திகழ்ந்தார்.

சென்ற தலைமுறையினர் சுதந்திரம் வாங்கிய இலங்கையில் பிறந்தவர்கள் அல்லர். நான் கூட அப்படித்தான் என்றாலும் சுதந்திர இலங்கையிலே என் வாழ்க்கையின் பெரும் பகுதி செலவிடப்பட்டுள்ளது. ஆனால் திரு. சின்னத்துரை போன்றவர்கள் வாழ்க்கையின் பாதி காலத்தை அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியை காலனித்துவ இலங்கையிலே கழித்தவர்கள். அதனால். சிங்கள – தமிழ் சமூகங்களிடையே ஒற்றுமையையும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் நாம் என்ற எண்ண அடிப்படையிலான உறவினையும் வளர்த்தே அவர்கள் வாழ்ந்தார்கள். சுதந்திர இலங்கையில் இனங்களிடையிலான சகோதரத்துவத்திற்குப் பங்கம் ஏற்பட அரசாங்கங்கள் பல பிரயத்தனங்களைச் செய்துங் கூட, சகோதரத்துவம். சகோதரத்துவந் தான் என்ற அடிப்படைக் கொள்கையில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தவர்கள் அவர்கள். காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவை ஒருமையில் விளித்தும் பேசிய திரு. சின்னத்துரையை ஒரு மூத்த சகோதரராகவே திரு. பிரேமதாசா அவர்கள் கண்டு பழகிவந்தார். அத்துணை சகோதர பாசம் என்றால் மிகையாகாது.

அப்பேற்பட்ட ஒரு இந்து–பௌத்த, தமிழ்–சிங்கள சகோதரத்துவம். சுதந்திர இலங்கையில் பிறந்தவர்களிடையே ஏற்பட பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் சகோதரர்கள் எங்கிருந்தாலும் சகோதரர்களே என்ற திரு. சின்னத்துரை அவர்களின் கோட்பாடு எம் எல்லோராலும் ஊன்றி கவனிக்கற்பாலது. சகோதரர்களிடையே பல குணாதிசய வேறுபாடுகள், பொறாமைகள், தனித்துவங்கள் இருக்கலாம். ஆனால் அடிப்படையில் நாம் யாவரும் ஒரு தாய் மக்களே என்று வாழ்ந்த திரு சின்னத்துரை அவர்களை நாம் என்றும் நினைவில் இருத்தக் கூடிய கைங்கரியம் யாதெனில் வருங்கால இலங்கை நாட்டில் சகோதரத்துவத்தையும் சுமூகமான இன சௌஜன்யத்தையும் ஏற்படுத்த நாங்கள் யாவரும் பாடுபடுதே. அவரின் வாழ்க்கை எங்கள் யாவருக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கட்டும்.

க. வி. விக்னேஸ்வரன்

நீதியரசர் தனியறை
உச்ச நீதி மன்றம்,
கொழும்பு - 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ministry
248, 2/1, காலி வீதி,
கொழும்பு-04.
248, 2/1, ගාලු පාර,
කොළඹ-04.
248, 2/1, Galle Road,
Colombo-04.

Jaffna Regional Office
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය
යාපනය
District Secretariat
Jaffna

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS
தியாகராசா மகேஸ்வரன், பா.உ.
තියාගරාජා මහේස්වරන්, පා.ම.
Thiyagarajah Maheswaran, M.P.

Ministry
Telephone : 01-554801
Fax : 01-554803
E-mail : tmahesh@eureka.lk

Jaffna Regional Office
Telephone : 021-2225613
Fax : 021-2223644

27-6-2003

"சிந்தனைச் சிற்பச் செல்வர்"

# சின்னத்துரை நூற்றாண்டு விழா மலருக்கான வாழ்த்துச் செய்தி

லீலா சின்னத்துரை எனப் புகழ்பெற்ற ஒரு சாதனை மனிதரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது அறிந்து மிக்க மகிழ்வடைகின்றேன்.

தாம் வாழ்ந்த காலத்திலே தனது அரிய நற்பணிகளால் தமிழர் சமூகத்திற்கும் தேசிய ரீதியில் எல்லோரையும் சகோதரர்களாகக் கருதி தொண்டாற்றியமையினால் அனைத்து மக்களுக்கும் அமரர் சின்னத்துரை அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டிருந்தபோதும் அனைத்திலங்கை ரீதியில் அவர் ஆற்றிய பணிகள் காரணமாக பிறந்த ஊருக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்த பெருமகன் அமரர் சின்னத்துரை அவர்கள்.

வர்த்தகத்தை தமது தொழிலாக மேற்கொண்டு பல நிறுவனங்களை உருவாக்கி பல நூறு குடும்பங்களின் வாழ்வுக்கு வழிசமைத்த ஒரு காருண்யமிக்க தொழிலதிபராக அவர் விளங்கினார். லீலா சித்திரக் கலண்டர் என்ற நாட்காட்டி அவரை புகழேணியின் உச்சத்துக்கு இட்டுச் சென்றது. ஒவ்வொரு நாள் தாளிலும் மானுட வாழ்வின் தேவைக்கு அவசியமான செய்திகளை வடிவமைத்து நாள்காட்டி உலகில் தனியிடத்தை கைப்பற்றிக்கொண்டது லீலா சித்திரக் கலண்டர்.

"சிந்தனைச் சிற்பச் செல்வர்" சின்னத்துரை அவர்கள் பார்வைக்கு எளியவராக விளங்கிய பொழுதிலும் ஓயாத உழைப்பும் விடாமுயற்சியும் கொண்டு "செய்யும் தொழிலே தெய்வம்" எனும் வாக்கை மெய்ப்பித்து எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியான வாழ்வை வாழ்ந்து காட்டிய செம்மல் என்றால் மிகையாகாது. அதேவேளை, தமது மதத்தினதும் தாம் சார்ந்த சமூகத்தினதும் நியாயபூர்வமான உணர்ச்சிகளைக் கருத்திற்கொண்டு, தம்மால் இயன்ற உதவிகளை காலமறிந்து செய்த ஒரு மாமனிதர் லீலா சின்னத்துரை அவர்கள். கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், கப்பித்தாவத்த ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய அறங்காவலர் சபை என்பவற்றிலே நீண்டகாலமாக அங்கம் வகித்ததோடு இவற்றின் மூலம் பல அறப்பணிகளும் அருட்பணிகளும் சிறப்பதற்கு உறுதுணையாக இருந்த பெருமகனார் லீலா சின்னத்துரை அவர்கள்.

இங்ஙனம் ஒரு தொழில் நிபுணராக சமூகப் பணியாளராக சைவாபிமானியாக பல்துறை விற்பனராக விளங்கிய ஒரு பெருந்தகையை நினைவுகூர்ந்து அவர்தம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மிகவும் போற்றுதற்குரிய பணியாகும். இப்பெரும் பணியை முன்னின்று செயற்படுத்துகின்ற விழாச் சபையினரை மனமாரப் பாராட்டுகின்றேன். நூற்றாண்டு நினைவு மலர் அவர்தம் சாதனையின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வரலாற்று ஆவணமாக அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

தி. மஹேஸ்வரன், பா.உ.,
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P. Chandrasekaran, M.P.

**Minister of Community Development &**
**Deputy Minister of Irrigation & Water Management**


## வடக்குக்கும் தெற்குக்கும் பாலமாக விளங்கியவர்

அமரர் "லீலா" சின்னத்துரை வடக்கிலே பிறந்து தெற்கிலே வாழ்ந்து பல்லின மக்களுடன் பழகி, நாட்டின் ஐக்கியத்துக்குப் பாலமாக விளங்கினார்.

அமரர் அவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தாலும் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகக் கருதிப் பணியாற்றியவர் என்றால் அது மிகையாகாது.

வடக்கே காங்கேசன்துறைப் பிரதேச ஆலயங்களில் இருந்து, தெற்கே கதிர்காமக் கந்தன் ஆலயம் வரையில் இந்து ஆலயங்களின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியை நாம் மறக்க முடியாது.

அது போலவே, புறக்கோட்டை, ஐக்கிய பௌத்த சங்கத்தில் பல பொறுப்புக்களை வகித்து அவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பணி ஆற்றினார். புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு முன்பாக அரச மரத்தடியில் அமைந்துள்ள பௌத்த ஆலயம் இவரின் அயரா உழைப்பில் உருவானது தான் என்பது பலருக்குத் தெரியாத விஷயம்.

சைவத்திற்குப் பெருந் தொண்டாற்றிய அப் பெருமகன் தமிழை மறந்தாரில்லை. தமிழ் நாட்காட்டிக்குப் புதிய வடிவத்தை ஏற்படுத்தித் தந்தவர் இவர். லீலா பஞ்சாங்கச் சித்திரக் கலண்டரை உருவாக்கி தமிழரின் தொன்மையை உலகுக்கு உணர்த்தியவர். நாட்காட்டி என்பது திகதிகளைக் காட்டுவது மட்டுமல்லாமல், வரலாற்று ரீதியான தகவல்களை மாணவர்களுக்கும் தமிழர்களுக்கும் தெரிவிக்கின்ற ஒரு களஞ்சியமாக இருக்க வேண்டும் என்று இதனை வடிவமைத்திருந்தார். தமிழ் நாட்காட்டி வரலாற்றில் புதிய சகாப்தத்தை இவர் தோற்றுவித்தார் என்றால் அது வெறும் புகழ்ச்சியாக மட்டும் இராது.

தன்னுடைய சாதனைகளுக்குப் பெருமை தேடிக்கொள்ள இவர் எப்போதும் முயற்சித்தவரல்ல. ஆனால் இவரின் சாதனைகளைத் தமிழர்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் தமிழருக்கு இவரை அடையாளம் காட்டுவதே இவருடைய நூற்றாண்டில் நாம் செய்யும் பணியாக அமைய வேண்டும்.

கொழும்பு நகருக்கு ரயிலில் வருவோரின் கண்களில் முதலில் தென்படுவது, கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமான் ஆலயத்தின் வான்முட்டும் கோபுரமே. அந்த ஆலயத்தின் அறங்காவலர் சபையில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அங்கம் வகித்துப் பெரும் சைவப் பணி புரிந்தவர் அமரர் சின்னத்துரை.

அவரின் புதல்வர்களான சி. அருளானந்தன் அவர்களும் சி. தனபாலா அவர்களும் இந்தச் சமய, சமூகப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, தந்தைக்குப் பெருமை சேர்த்து வருகின்றார்கள்.

தமிழுக்குத் தொண்டு செய்பவர்கள் என்றும் மரணிப்பதில்லை. அந்த வகையிலே, தமிழுக்கும் சைவத்துக்குமாக வாழ்ந்த அமரர் சின்னத்துரையின் நாமம் அவரின் அயரா உழைப்பால் உருவான கோபுரங்களும், தமிழ் மொழியும் உள்ளவரை நிலைத்து வாழும்.

அமரரின் நூற்றாண்டு விழா சிறப்புற்று அமைய வாழ்த்துக்கள்.

**பெ. சந்திரசேகரன், பா.உ.,**
சமூக அபிவிருத்தி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி
# දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
# TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: 347721
Fax: 384904

30/1B, Alwis Place,
Colombo - 3


05-07-2003

அமரர் ச.த. சின்னத்துரை அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுக்கப்படுகிறது என்ற இனிய செய்தி எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. நாம் நன்றாக பேசி பழகிய ஒருவர் அமரத்துவம் அடைந்து பல ஆண்டுகளுக்குப்பின் அவரை நன்கு அறிந்தவர்கள், அவருடன் பேசிப் பழகியவர்கள் எல்லோரும் ஒன்று கூடி அவரைப்பற்றிய இனிய நினைவுகளைப் பரிமாறிக் கொள்வதில் ஓரு தனி மகிழ்ச்சியே உண்டு. அன்னாருடன் நான் பழகிய காலத்தைப் பற்றி அவரின் புதல்வன் தனபாலாவுடன் நான் அடிக்கடி நினைவு கூர்வேன்.

**1950**ம் ஆண்டு மகாத்மாஜி படுகொலை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் மட்டும் கடந்திருந்த வேளை, காந்திஜி மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டிருந்த எனக்கு அன்னாரின் ஞாபகம் வந்தாலே என் கண்கள் பனிக்கும். நானும், இன்னும் ஒரு நண்பனுமாக கூடி "காந்தி ஜயந்தி" யை கொண்டாடுவதாக தீர்மானிக்கின்றோம். நானோ கொழும்பிற்கு புதியவன். இருந்த போதும் நாம் வாழ்ந்த சிங்களக் கிராமத்தில் இருந்த தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பைத் தந்தனர்.

எமக்கு உடனடியாகத் தேவைப்பட்டது எம் விருப்பிற்கேற்ப தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் துண்டுப் பிரசுரம் அச்சடிக்கக் கூடிய ஓர் அச்சகம். அச்சகம் தேடும் பணியில் ஈடுபட்டவேளை, மலிபன் வீதிக்கு வருகிறேன் "லீலா அச்சகம்" என் கண்களுக்கு தெரிகிறது. வாட்டசாட்டமான **50** வயது மதிக்கக்கூடிய செந்தழிப்பான முகத்துடன் வீற்றிருக்கின்றார் அச்சகத்தின் முதலாளி. சிங்களக் கிராமத்தில் ஒரு தமிழ் இளைஞரான நான் ஈடுபட்டிருந்த பணியினை மிகவும் பாராட்டிய முதலாளி அமரர் சின்னத்துரை அவர்கள் தான் இந்த அச்சக சொந்தக்காரர் என்றும், அறிமுகம் செய்து கொண்டது மட்டுமன்றி, மிகவும் குறைந்த செலவிலேயே துண்டுப் பிரசுரத்தை அச்சடித்து தந்தது மட்டுமல்லாமல் தன் பங்களிப்பாக ஒரு தொகையை இலவசமாக அடித்துக் கொடுத்தார். அன்று ஏற்பட்ட நட்பு பலகாலம் நீடித்த போதும், நான் கிளிநொச்சி சென்றடைந்ததும் எம் நட்பில் தொய்வு ஏற்பட்டதை நினைத்து நான் வருந்துவதுண்டு.

அன்றைய தொழிற்கட்சி பிரதிநிதியாக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அமரர் பிரேமதாசா அவர்களின் தொடர்பும் அமரர் சின்னத்துரை அவர்களால் ஏற்பட்டதே. மிகவும் சிறப்பாக உரை ஆற்றக்கூடிய திரு. பிரேமதாசா அவர்களின் உறவும் **1950**ம் ஆண்டு ஆரம்பித்ததே. அன்று ஆரம்பித்த உறவு அன்னார் ஜனாதிபதியாகிய பின்பும் நீடித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சின்னத்துரை அவர்கள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் பெருமளவில் நட்பு கொண்டிருந்தது மட்டுமன்றி அவரின் முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். அவரின் வளர்ச்சியை கண்டு மகிழ்ந்தவர். அதே போன்று அமரர் பிரேமதாசாவும் அமரர் சின்னத்துரை அவர்கள் மீது பெரும் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்.

தந்தை செல்வா அவர்களின் அரசியலிலும், அவர் மீதும் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த அமரர் சின்னத்துரை அவர்கள் தந்தையின் கட்சியாகிய தமிழரசு கட்சியையும், பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியையும் வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய வேளை அமரர்களான தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான், மு. திருச்செல்வம் ஆகியோர்களை ஒரே படத்தில் எடுத்து பல்லாயிரக்கணக்கான நாட்காட்டிகளை அடித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்த பெருமையும், பின்பு 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 1977ம் ஆண்டு தேர்வானபோது இலட்சக்கணக்கான கலண்டர்களை அடித்து நாடு பூராவும் ஒவ்வொரு மூலை முடுக்குகளிளலும் ஒவ்வொரு வீடுகளிலும் தொங்க விடவைத்த பெருமையும் அவரையே சாரும்.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா ஏற்பாடுகளில் அவரின் புத்திரன் ஆற்றிய பணி, அமரர் சின்னத்துரை அவர்களையே எமக்கு நினைவூட்டியது

சமயத் தொண்டில் அமரர் சின்னத்துரை அவர்களின் பங்களிப்பு சொல்லில் அடங்கா. சைவத்தை வளர்த்த பெரியார்களின் வரிசையில் அவருக்கோர் நிரந்தர இடம் இருப்பது போல் புத்த சமயத்திற்கும் அவர் பெரும் பணி புரிந்துள்ளார். அதுமட்டுமல்ல தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டவர்.

தந்தையின் தொண்டுகளை தொடர்ந்து செய்யும் மைந்தர்களை பௌத்த உயர்பீடமே கௌரவித்தமை எமக்கே பெருமை தருகின்றது. அமரர் சின்னத்துரை அவர்களைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதமுடியுமானாலும், இன்னும் ஓரு விடயம் பற்றி மட்டும் கூறிவைக்க விரும்புகின்றேன். "சித்திர பஞ்சாங்க" கலண்டரை முதல் தடவையாக தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்த பெரியார், அத்துடன் நின்றுவிடாது சகல கோவில்களிலும் நடக்கும் விசேட தினங்கள், பல மறைந்த பெரியார்கள் பற்றிய குறிப்புக்கள் அனைத்தையும் லீலா பஞ்சாங்கக் கலண்டரில் தந்த பெருமையும் அன்னாருக்கே. அமரர் சின்னத்துரை அவர்களின் நினைவு தமிழ் மக்களின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வீ. ஆனந்த சங்கரி, பா.உ.,
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ලංකා කම්කරු කොන්ග්‍රස්
**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்**
**CEYLON WORKERS CONGRESS**



# தமிழர்களின் நலன்களுக்காக உழைத்தவரே

## சிந்தனைச் சிறப்புச் செல்வர் ச.த.சின்னத்துரை ஜே. பீ.

பல ஆண்டு காலமாக இலங்கையில் ஓங்கி வளர்ந்து வாழ்ந்த தமிழினம் எதிர்பாராத சூழ்நிலையில் ஓரளவு தாழ்வடைந்தது. அந்த நாட்களில் தமிழரின் உரிமைக்காக முன் நின்று உழைத்தவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், தமிழ் காங்கிரசும், இலங்கை தமிழரசுக் கட்சியும். இம் மூன்று பிரதான கட்சிகளையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைவு பெற்ற போது அதன் ஆக்கத்துக்கு முன்னின்று உழைத்தவர்களில் அமரர் ச. த. சின்னத்துரையவர்களும் ஒருவர்.

பிரபல்ய வர்த்தகரான அமரர் சின்னத்துரை அவர்கள் கொழும்பில் லீலா வர்த்தக நிறுவனங்கள் பல அமைத்து வியாபார வட்டத்தில் கொடிகட்டிப் பறந்தவர். இவர் முக்கியமாக தமிழ், சிங்கள பஞ்சாங்க கலண்டரை சித்திர வடிவம் அமைத்து மக்களுக்கு சேவை செய்த ஒரு பெருமகனாவர். மருதானை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற சமய நிறுவனங்களுடன் இணைந்து சமய, சமூக சேவை ஆற்றிவந்தார்.

திரு. சின்னத்துரை அவர்களின் ஒன்பது புத்திரர்களும் தந்தை வழி நின்று இன்றுவரை அவருடைய சமய, சமூகப் பணிகளை சிரமேற்கொண்டு வழி நடத்துவது கண்டு பெருமைப்படுகின்றேன்.

தொழிற்சங்கவாதி என்ற முறையில் திரு சின்னத்துரை ஐயா எனது கண்முன் நிற்பவர். தொழிற்சங்கவாதிகளான பிலிப் குணவர்தன, பாலாதம்பு, சண்முகதாசன் அவர்களுடன் தொடர்புகொண்டு தொழிற்சங்க வளர்ச்சிக்கு உதவிகள் பல செய்தவர்.

சின்னத்துரை ஐயாவின் 100வது ஜனன விழா - 2003 மலர் இனிதே அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எம். எஸ். செல்லச்சாமி
பிரதித் தலைவர் – இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
ஆலோசகர் – வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

25-6-2003

---

# பிரார்த்தனை உரை

## லீலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

## அமரர் சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு நிறைவு

"தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது"

என்பது வள்ளுவர் வாக்கு. மானிடப்பிறவியில் சமூகத்துக்கு நற்பணியாற்றி அமரத்துவமடைந்த ஒரு சில பெருமக்களை நாம் நினைவிலிருத்த வேண்டிய கடமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம். "லீலா" என்ற நிறுவனத்தோடு ஒன்றி விட்ட பிரமுகர் அமரர் சின்னத்துரை ஆவர். இவர்களுடைய பிள்ளைகளும் ஆதரவாளர்களும் நூற்றாண்டு விழா எடுப்பதற்கு முன்வந்துள்ளனர். தெல்லிப்பழைப் பகுதியைப் பிறப்பினால் அணிசெய்த குடும்பம் அமரர் சின்னத்துரை அவர்களுடைய குடும்பமாகும். கொடைத்திறனும், சமூக நேயமும், பண்பாட்டு உறுதியும் கொண்டவர் அமரர் அவர்கள். இவ்வுறுதிப்பாட்டை இவருடைய பிள்ளைகளும் பேணி வருவது கண்கூடு. சிறப்பாக உயர்திரு. தனபாலா அவர்கள் எமது பாராட்டுக்குரியவர். தெய்வ காரியங்களிலும் சமூக மேம்பாட்டிலும் முன்னின்று உழைப்பவர் இவர்.

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

இதனை மெய்ப்பித்து வருபவர்கள் அமரரின் பிள்ளைகளாவர். பரோபகார சிந்தனை உடையோர் பலரும் இக்குடும்பத்தின் மகத்துவத்தை அறிந்து பின்பற்ற வேண்டும். ஆகவே அமரர் சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எமது பிரார்த்தனையைக் சமர்ப்பித்து அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபை
# THIRUKONESWARA TEMPLE PARIPALANA SABAI

*President:*
M.K. SELLARAJAH J.P.UM
Attorney at Law & N.P.
Justice of Peace all Island
&
Unofficial Magistrate.



143, Main Street.
Trincomalee.
Tel.026-22667

03-07-2003

---

## தன்னலமற்ற தொண்டர் ச.த. சின்னத்துரை நூற்றாண்டு ஜனன விழா பொலிவுறுக

பன்னெடுங்காலமாக கொழும்பில் சைவசமயத்தொண்டைச் சிறப்பாக்க மருதானை கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் ஆலயம், கதிர்காமத்தொண்டர் சபை இவற்றில் நிர்வாகியாகக் கடமையாற்றி வந்தவர் திரு. ச. த. சின்னத்துரை அவர்கள்.

அகில இலங்கை இந்து மாமன்ற வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வளர்த்தவர். திருக்கேதீச்சுவர ஆலயத்திருப்பணிச் சபைக்கும் அவ்வப்பொழுது சிறந்த ஆலோசனைகள் உதவியமை போற்றத்தக்கதாகும்.

அரசியல் பிரமுகர்களின் ஆலோசனைகளைச் செவிமடுத்து தமிழ், சிங்கள சமுதாயத்துக்கு பஞ்சாங்க நாட்காட்டிகள் மூலமும் சேவைபுரிந்தவர்.

அச்சுக்கலையைப் பெரிதுபடுத்தி பிரசுரங்களையும், பாட நூல்களையும் அவ்வப்பொழுது வெளியிட்டு மாணவர் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிந்தவர்.

சின்னத்துரை ஐயாவின் புத்திரர்கள் அவரது வழியைப் பின்பற்றி தொடர்ந்து பணிகள் ஆற்றி வருகின்றார்கள். ஜனனதின விழாவுக்கு வருகை தரும் பெரியார்களும் அவரின் சேவையைப் பெரிதும் மதிப்பவர்கள் என்பதை அறிவோம்.

எம். கே. செல்வராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை சிற்பச் செல்வர் ச.த.சின்னத்துரை அவர்களை நினைவு கூர்வோம்

வி. ரி. வி. தெய்வநாயகம் பிள்ளை J.P.
தர்மகர்த்தா, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், ஜிந்துப்பிட்டி.

நமது ஜிந்துப்பிட்டி முருகன் கிருபை செய்வாராக. ஈழத்திருநாட்டில் வடக்கே கடலருகே சிறந்து விளங்கும் காங்கேசன் துறையை தன் பிறப்பிடமாகக்கொண்ட சிந்தனைச் சிற்பச் செல்வர் சண்முகம் தம்பையா சின்னத்துரை அவர்கள் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் கூற்றுக்கமைய வாழ்ந்து காட்டியவராவார். இளம் பருவத்தில் சின்னத்துரை அவர்கள் தமது அயரா உழைப்பு, நேர்மை ஆகியவற்றின் பலனாக வர்த்தகத்துறையில் மேலோங்கி திகழ்ந்ததுடன் அச்சகத் துறையில் ஈடுபாடு காட்டியதன் பிரதி பலனாக கலண்டர் வெளியீட்டு துறையில் தனக்கென ஓர் இடத்தினை நிரந்தரமாக்கி கொண்டார்கள்.

இந்தியாவில் மகாத்மா காந்தி அவர்கள் தொடக்கி நடத்தி வந்த "கதர் இயக்கம்" இலங்கையில் பரவத்தொடங்கிய கால கட்டத்தில் துடிதுடிப்பு மிக்கவராக விளங்கிய சின்னத்துரை அவர்களுக்கு இவ்வியக்கத்தில் ஒர் ஈடுபாடு உண்டாயிற்று. அன்று முதல் கதர் ஆடைகளையே விரும்பி உடுத்தியதுடன் அவற்றை உற்பத்தி செய்யவும் தொடங்கியதனால் அனைவராலும் "காந்தி சின்னத்துரை" எனப் போற்றப்பட்டார்கள். தனது திருமணத்தையும் பூரண கதர் திருமணமாக நிகழ்த்தினார்கள்.

இலங்கையில் இந்திய காங்கிரஸ் இயக்கத்தை ஆரம்பித்த திரு. கோ. நடேசையர் அவர்களுடனும், அன்பர் பூபதி தாசர் முதலியவர்களுடனும் இணைந்து முழுமூச்சுடன் செயலாற்றினார்கள். இவ்வியக்க வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டிவந்தார்கள்.

1930ம் ஆண்டிலே காங்கேசன் துறையில் "பரஸ்பர நன்மை விருத்தி சங்கம்" ஆரம்பித்து அதன் மூலம் கிராம கைத்தொழில்களை விருத்தி செய்து அங்கு வாழ்ந்த வறிய மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதில் முழுச் சிரத்தையும் எடுத்துக் கொண்டார்கள்.

சின்னத்துரை அவர்கள் செய்து வந்த சமயத் தொண்டுகள் எடுத்துக் கூற முடியாதவை. கதிர்காம தொண்டர் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றில் துணைத் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார்கள் புறக்கோட்டை, அரசமரச் சந்தியில் அமைந்துள்ள போதி ராஜ சமித்தியை ஸ்தாபிப்பதில் பெரும் பங்கு வகித்ததுடன் ஆரம்ப காலத்தில் சமித்தியின் பொருளாளராக இருந்து பின்னர் தர்மகர்த்தாவாகவும் விளங்கி சமித்தியின் வளர்ச்சிக்கு முழுமையாக பாடுபட்டு வந்தவர்கள் என்பதையும் நினைவு கூர வேண்டும்.

இவ்வாறு நாட்டின் பெரும் நலன், சமூக நலன், அரசியல் மேம்பாடு, சமய அபிவிருத்தி, நாட்டின் கல்வி முன்னேற்றம், வர்த்தகத் துறை, அச்சகத் துறை ஆகியவற்றின் நலன் கருதி பல மாண்புறு பணிகளை ஆற்றி வந்தவர்கள் சின்னதுரை அவர்கள் என்பதில் ஐயமில்லை.

அன்னாரது ஞாபகமாக நூற்றாண்டு விழாவையொட்டி மலர் ஒன்று வெளியிடுவதனைஅறிந்து மிக்க மகிழ்ச்சியடைவதுடன் இம்மலர் சகல விதத்திலும் சிறப்புற்றோங்க நமது ஜிந்துப்பிட்டி முருகனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் அன்புத் தாயார் திருமதி. த. இலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Here stood the house where Mr. Sinnadurai was born in 1903*

1903ம் ஆண்டு அமரர் பிறந்த புண்ணிய பூமி.




**Ruins of "Leela Sthan" KKS**

அமரரின் பூர்வீக வாசஸ்தலங்களில் ஒன்றான லீலா ஸ்தான் யுத்த சூழ் நிலையால் சிதைவடைந்த நிலையில் – தனயன் டாக்டர் சோமசேகரம் இல்லத்துக்கு முன்பாக 2002ம் ஆண்டில் எடுத்த புகைப்படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் தெல்லிப்பளை வாசஸ்தலத்தின் ஒரு பகுதி.
அமரரவர்கள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சகிதம் நிற்பதைக் காண்கின்றீர்கள். (1946)



பரஸ்பர நன்மை அபிவிருத்திச் சங்க அநுசரணையில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு **29-7-1946**ல் அடிக்கல் நாட்டும் வைபவத்தில் அமைச்சர்களான ஜீ.சீ.எஸ். கொரியா, சு. நடேசன் ஆகியோருடன் அமரர் ச.த. சின்னத்துரை அவர்களும் காணப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI PONNAMBALAVANESWARAR DEVASTHANAM

38, Sri Ramanathan Mawatha,
Colombo - 13.
Sri Lanka.
Telephone : 431252

# சகாப்தம் காணும் சாதனையாளர்

அமரர் ச. த. சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு மலரில் அன்னாரை நினைவு கூரக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ச. த. சின்னத்துரை அவர்கள் இளவயதிலேயே தொழில் நாடி கொழும்பில் குடியேறினார். பிரபல வர்த்தகப் பிரமுகராகவும் சிறந்த சமூகத் தொண்டராகவும் கொழும்பிலும் யாழ் குடா நாட்டிலும் இவர் பலராலும் மதிக்கப்பட்டார்.

அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் எமது நாட்டின் வர்த்தகம், சமயம் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் அமரர் சின்னத்துரை அவர்கள் தமது இடையறாத முயற்சியினால் பல சவால்களை எதிர்கொண்டு சாதனைகள் படைத்தார். தலைநகரிலேயே வர்த்தகத் துறையில் ஆதிக்கம் செலுத்தி பதிப்பகங்களையும் வியாபார நிலையங்களையும் நிறுவி, திறம்பட நிர்வகித்தார். நியூ லீலா ஸ்ரோர்ஸ், நியூ லீலா அச்சகம், ஏ.கே. சங்கரன் அன் கம்பனி ஆகிய நிறுவனங்களின் அதிபராக இவர் விளங்கினார்.

சின்னத்துரை அவர்கள் ஆற்றிய சமயத் தொண்டுகள் பல. மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தான அறங்காவல் சபை உறுப்பினராக பல ஆண்டுகள் சேவை புரிந்தார். கதிர்காமத் திருத்தலத்தின் யாத்திரிகர் தொண்டர் சபையில் பங்காற்றி பல மடாலயங்கள் சிறப்புற செயற்பட உதவினார். காங்கேசன்துறை ஆனந்தப் பிள்ளையார், வீரபத்திரர், முத்துமாரியம்மன் ஆகிய கோவில்கள் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகியவற்றின் ஆலய சடங்குகளிலும் அதீதமான ஈடுபாடு கொண்டிருந்தார்.

அகில இலங்கை இந்து மா மன்றத்தின் ஆரம்ப கால அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு உழைத்த பெருந்தகையாவார். அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவராக பல முறை தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

சைவசமயத்திற்கு தொண்டாற்றியதைப் போலவே பௌத்த வழிபாட்டு தலங்களின் வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்டினார். இதனைப் பாராட்டி பௌத்த மத உயர் பீடங்கள் அன்னாருக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளமையை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

நேர்மையான அரசியலில் அக்கறை காண்பித்த சின்னத்துரை அவர்கள், அமரர்கள் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், முன்னாள் ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜயவர்த்தன, ஆர். பிரேமதாச மற்றும் திரு பிலிப் குணவர்த்தன ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார். தமிழ், சிங்கள நல்லுறவை வளர்க்கவும், பலப்படுத்தவும் அரசியல்வாதிகளின் நெருக்கம் அவருக்கு உறுதுணையாக இருந்தது.

அமரர் திரு சின்னத்துரை அவர்கள் ஒரு சகாப்தம் அல்ல பல சகாப்தங்கள் நினைவு கூரத்தக்க மாண்பு மிகு மனிதர்.

**டீ. எம். சுவாமிநாதன்**

அறங்காவலர்
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தாலும் வாழும் மாமனிதர்

இந்த உலகத்திலிருந்து என்றோ ஒரு நாள் நாம் மறைவது இயற்கை. யாரும் இதிலிருந்து விலக்கல்ல. இதனால் தான் பட்டினத்து அடிகள் "முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங் கண்ட பின்னும்" என்று பாடினார்.

சுவாமி சின்மயானந்தர் "வாழும் பொழுது செத்துச் செத்து வாழாதே மறைந்த பின்னும் நீ வாழ வேண்டும்" என்று சொல்லுவார்.

நம்மில் பலர் வாழ்கிறோம். மறைந்த பின்னும் வாழ்வது மிகச்சிலரே. மறைந்த பின்னும் வாழ்வது எப்படி எனக்கேள்வி எழுகின்றது. பிறருக்காக வாழ்பவனே என்றும் மக்கள் மனதில் வாழ்கின்றான் என்று சரித்திரம் படம் பிடித்துக் காட்டுகிறது.

அமரர் சின்னத்துரை அவர்கள் இந்த ஸ்தூல உலகத்திலிருந்து மறைந்து விட்டாலும் மக்கள் மனதில் நிலையான இடம் கொண்டுள்ளார்கள்.

வியாபார சாதனைகள் பெருமை மிக்கவையே. ஆனால் சம்பிரதாயங்களில் ஊறிப்போயிருந்த குடாநாட்டில் அக்காலத்தில் மனித நேயத்தை மனதில் கொண்டு

"ஆவுரித்து தின்று உழலும் புலையரேனும் கங்கைவார்
சடைக்கரந்தார்க் அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே"

என்று சொல்லுகின்ற துணிவு. எத்தனை பேருக்கு வரும். மனதில் சரி என்று பட்டதை எடுத்துச் சொல்லி நமது சமுதாயம் மேம்படவேண்டும் என பாடுபட்டவர் திரு சின்னத்துரை அவர்கள்.

இறைவன் பெயரால் உயிர்க்கொலை செய்வதை 'நிறுத்துங்கள்' என உரக்க குரல் கொடுத்தார். இறைவன் தன்னைப் படைத்தது மக்கள் பணியும் மகேசன் பணியும் செய்வதற்காகவே என்ற எண்ணம் அவர்கள் மனதில் ஆழப்பதிந்திருந்தது. மக்கள் வளமாக வாழ வேண்டும் என்பதற்காக "பரஸ்பர நன்மை விருத்திச் சங்கம்" ஆரம்பித்தார்கள். காங்கேசன்துறையில்தான் சீமெந்து தொழிற்சாலை நிறுவவேண்டுமென்று தூது சென்றார்கள். மதுவை ஒழிக்க ஓயாமல் பிரசாரம் செய்தார்கள். அப்பப்பா மக்கள் நலம் விரும்பி அவர்கள் செய்த பணிகள் பலப்பல.

ஐயா, உங்கள் பூதவுடல் மறைந்து விட்டது. நீங்கள் எங்களுக்காக செய்த பணிகளை நினைந்து நினைந்து நெக்குருகுகின்றோம்.

தெ. ஈஸ்வரன்

2/07/03

அறங்காவலர்
ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில்
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P. Vallipuram

**Justice of Peace. Retd. Collector of Customs**
**Trustee, Sri Bathrakali Amman Devasthanam**
**17-A Mayura Place, Colombo - 6, Sri Lanka.**
**☎: 0094-1-598788**

---

உ

**26.06.2003**

சிந்தனைச் சிற்பி, கொடை வள்ளல், தீர்க்கதரிசி, இறை பக்தன் அமரர் சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு விழா **13.07.2003** ஞாயிற்றுக்கிழமை ஆனி மாதம் **29**ம் நாள் பௌர்ணமி தினத்திலே, கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் **16**வது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவத்தின் ஆரம்ப நாளிலே அமைந்திருப்பது சாலப் பொருத்தமாகும்.

அமரர் ச. த. சின்னத்துரை அவர்களை **1954**ம் ஆண்டிலிருந்து நன்கு அறிந்திருக்கிறேன். பழகியிருக்கின்றேன். எளிமையான தூயவெள்ளை உடுப்பும், தர்ம சிந்தனையும், குடும்ப பொறுப்பும் உள்ள ஒரு கனவானை இன்று காண்பது அரிதாகவே உள்ளது. கடமை உணர்வோடும், கண்ணியமாகவும், கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்து மறைந்த செம்மல் திரு. சின்னத்துரை அவர்களாவர். எல்லாவற்றையும் சிறப்பாக அள்ளிக்கொடுத்த இறைவன் ஒரு பெண்குழந்தையை கிள்ளிக் கொடுப்பதற்குத் தான் மறந்துவிட்டான் என்று பலமுறை என்னிடம் சொல்லி வேதனைப்பட்டிருக்கிறார்கள். அன்னாரின் சிந்தனைகளை அவர் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் நிறைவேற்றி வருவது போற்றுதற்குரியது.

அப்படியான பண்பான உள்ளத்தவருக்கு நூற்றாண்டு விழா எடுப்பது சாலச் சிறந்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அம்பாள் அடியவன்

**பொன். வல்லிபுரம்** ஜே.பீ.

இளைப்பாறிய சுங்க அத்தியட்சகர்
அறங்காவலர், மயூரபதி திருக்கோவில்
124/3, லவுறீஸ் வீதி,
கொழும்பு - 4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலார் லீலா ச.த.சின்னத்துரை ஜே.பீ. அவர்கள் புகழ் வாழ்க

பிரபல தொழில் அதிபரும், வர்த்தகரும், லீலா ஸ்தாபன ஸ்தாபகருமான திருமிகு. சின்னத்துரை அவர்களின் நூறாவது ஆண்டு நிறைவினை நினைவுகூரும் இச்சந்தர்ப்பத்தில் நாங்களும் அவருடைய பணிகளை நினைத்துப்பார்ப்பதில் பெருமை அடைகிறோம்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து பெருமைகண்டவர் லீலா சின்னத்துரை அவர்கள். சமாதான நீதவானாக, இளைஞர்களின் வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த மக்கள் சேவையாளர் திருமிகு. சின்னத்துரை அவர்கள். அன்னாரின் அயராத உழைப்பின் பயனாக ஆண்டுதோறும் எம் கைகளில் தவளும் லீலா சித்திரக் கலண்டர் அவரது வெற்றியின் அடையாளம்.

அன்னாரது சமய ஈடுபாடும் மெச்சுதற்குரியது. அன்னாரும் அவரது குடும்பத்தினரும் சமய வளர்ச்சிக்கு ஆற்றிய, ஆற்றிவரும் பணிகள் மகத்தானவை. திருமிகு. சின்னத்துரை அவர்கள் இந்துக்கோவில்களுக்கு மட்டுமன்றி, பௌத்த திருத்தலங்களுக்கும் வாரி வழங்கிய உயர் பண்பாளராவர்.

திருமிகு. சின்னத்துரை அவர்களின் குடும்பத்தினருக்கும் பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்திற்குமான தொடர்பு மிகவிரிந்தது. அவர்களின் உயர்ந்த பணிகளை இத்தருணத்தில் மீண்டும் நினைவு கூர்ந்து வாழ்த்தி நிற்கின்றேன்.


"அருட்பணி அரசு"

வை. சந்திரசேகரம்

அறங்காவலர்

ஸ்ரீ மாணிக்க விநாயகர் தேவஸ்தானம்,

**75018 - பாரீஸ்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை செல்வாவுடன் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்த ஜனாதிபதி R. பிரேமதாசா உடன் ஓர் இனிய உரையாடல் அருகில் செனேட்டர் T. நீதிராஜா அவர்களும் உரையாடலில் கலந்து கொள்கின்றார்.



ஒரு நிகழ்ச்சியில் அமரரவர்கள் திரு. பிரேமதாசா அவர்களுக்கு ஓர் அன்புப் பரிசு கொடுக்கின்றார். அருகே பிரதமமந்திரி டட்லி சேனாநாயக்க, அமைச்சர் V.A. சுகததாசாவும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் மறைந்த புதல்வர் சட்டத்தரணி பாவேந்திராவினுடைய திருமணத்தின்போது திருவாளர்கள் **J.R.** ஜெயவர்த்தன, சுகததாசா, வின்சற் பெரேரா ஆகியோருடன் அமரர்.



தெல்லிப்பளை வைத்திய சாலையில் அமரர் தனது தாயார் நினைவாக அமைத்த கட்டிடத் திறப்பு நிகழ்ச்சியின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் புதல்வன் அருளானந்தன் அவர்களின் திருமண வைபவத்தில்
மறைந்த ஜனாதிபதி **R.** பிரேமதாசா கலந்துகொண்ட காட்சி.



அமரரின் புதல்வர் தனபாலாவினுடைய திருமண வைபவத்தில் கலந்துகொண்ட
**S.J.V.** செல்வநாயகம், பிரேமதாசா அவர்களுடன் அமரரும்
பாரியார் திருமதி சௌபாக்கியம் அவர்களும் காணப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)


தலைவர்
வி. கயிலாசபிள்ளை
தொலைபேசி : 575566 ( இல்லம்)
444024 (அலுவலகம்)
தொலைநகல்: 575472
மின் அஞ்சல்: hariomak@eureka.lk

பொதுச்செயலாளர்
கந்தையா நீலகண்டன்
தொலைபேசி : 580807 ( இல்லம்)
334349 (அலுவலகம்)
தொலைநகல்: 445255
மின் அஞ்சல்: neela@sri lanka.net

கௌரவ பொருளாளர்
சிவ. கந்தசாமி
தொலைபேசி :586620(இல்லம்)


அமரர் திரு. ச. த. சின்னத்துரை அவர்களின் நூறாவது பிறந்த தினத்தில் அன்னார் செய்த அபார சேவைகளை நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் ஆரம்பகாலம் தொட்டு அரும்பாடுபட்டு உழைத்த பெரியவர் அவர். உபதலைவராகப் பலமுறை தெரிவு செய்யப்பட்ட அமரர் சின்னத்துரை மாமன்றத்தின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

தலைமையகக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என ஒரு ஏங்கிய ஒரு புனித உள்ளம் அவர். அதுதான் போலும் அவரின் மைந்தன் தனபாலா கட்டிடக் குழுத் தலைவராக இருந்த போது தலைமையகக் கட்டிடம் பூர்த்தி பெற்றது.

இன்று மாமன்றத்தின் உபதலைவர்களாக இருக்கும் இருவரைப் பெற்றெடுத்து வளர்த்த பெருமைக்குரிய தந்தை அமரர் சின்னத்துரை.

தமிழ் உலகிற்கு லீலா கலண்டரை அறிமுகம் செய்து புரட்சி படைத்த அவரைச் சட்ட மாணவர் இந்து மகாசபையின் செயலாளராக, பின் தலைவராக, அறுபதுகளின் பிற்பகுதியில் கடமைபுரிந்தபோது சந்தித்து அவரின் உதவியைப் பெற்றவன் என்ற முறையில் நன்றி உணர்வுடன் அவரின் ஆத்மாவுக்குத் தனிப்பட்டமுறையிலும் வணக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாமன்றத்தின் சார்பில் அமரர் சின்னத்துரையின் புகழ்பாடி அவர் வழியில் அவரின் சந்ததி இந்நாட்டு மக்களுக்கு உழைக்க இறைவன் அருள் புரியப் பிராத்திக்கின்றேன்.

கந்தையா நீலகண்டன்
பொதுச்செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தீர்க்கதரிசி"

"கலாபூஷணம்" "அருள்மொழி அரசி" வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி.

"லீலா சித்திர நாட்காட்டி" என்றால் தெரியாதவர்கள் இல்லை. பெரியோர்களின் படங்களை அவர்களின் நினைவு தினங்களில் இணைத்து அவர்களின் சிறப்புக்களை, வரலாற்றுக் குறிப்புக்களை நாட்தாளைப் பார்க்கும் பொழுதே நமது நெஞ்சில் பதிக்கும் புதிய முயற்சியைக் கையாண்டு அதில் வெற்றி பெற்றவர் அமரர் சண்முகம் தம்பையா சின்னத்துரை அவர்கள்.

திரு. சின்னத்துரை அவர்கள் தனியொரு மனிதரல்லர். அவர் ஒரு ஸ்தாபனம். அவரின் உள்ளிருந்து ஊற்றெழும் உயரிய எண்ணங்களுக்குச் செயல் வடிவம் தந்தவர். குறிப்பாக சிங்கள பௌத்த மக்களும் தமிழ் மக்களும் இதயத்தால் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற எண்ண உறைப்புக் கொண்டவர். இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக தம்மக்கள் இருவருக்கு சிங்களப் பெயரை (திரு. தனபால, திரு. தேசபந்து) வைத்தவர். முதன் முதலாக சிங்கள மொழியில் நாட்காட்டி வெளியிட்டவர். தனது கடைக்கு அருகாமையிலுள்ள பௌத்த விகாரத்துக்குச் சென்று வழிபடுவதோடு மட்டுமல்லாமல் பொருளுதவியும் செய்து வந்தவர். இந்த நாட்டில் இனவேற்றுமை வேர் கொண்டால் எதிர்காலத்தில் ஒரு பட்டினிப் பட்டாளமே உருவாகும் என்று கூறிய தீர்க்கதரிசி.

அமரர் திரு. பிரேமதாச, அமரர் திரு. இரியகொல்ல போன்றவர்களை நெருங்கிய நண்பர்களாகக் கொண்டிருந்தும் தம் தகைமையிலிருந்து மாறாது இருந்தவர் அமரர் ச. த. சின்னத்துரை அவர்கள். இனம், மொழி, மதம் கடந்து "எல்லோரும் ஒரு குலம்; எல்லோரும் ஓரு நிறை" என வாழ்ந்து காட்டிய பெரியார். நாடு ஒன்றுபட வேண்டும் என்று எண்ணுவதற்கு முன்பாகத் தம் வீட்டை ஒன்றாய் அமைத்து வழி காட்டியவர். அமரர் திருமதி சௌபாக்கியம் அவர்களைக் கரம்பிடித்து அனைத்து சௌபாக்கியங்களையும் பெற்ற திரு. சின்னத்துரை அவர்கள் தாம் பெற்ற ஆண்மக்கள் எண்மரையும் ஒரே குடும்பமாக ஒற்றுமையாக வாழச்செய்து வெற்றியைக் கண்டவர். இன்றளவும் அக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் கடல்கடந்து இருந்தாலும் இதயத்தால் ஒன்றுபட்டு வாழ்வாங்கு வாழ்பவர்கள்.

அளப்பரிய சாதனைகளைச் செய்த செம்மல் அமரர் திரு. ச. த. சின்னத்துரை அவர்களது நூறாவது பிறந்ததின விழாவில் அவர்களது பணிகளை நினைவு கூர்ந்து வைரச் சுடர் போன்று நூற்றாண்டு இதழினையும் வெளியிடுவது சாலப் பொருத்தமானது. காரணம் வைரம் ஒளிமிக்கது, உறுதியானது, விலைமதிப்பற்றது. அது போன்று அமரர் அவர்களும் தனது பணிகளால் ஒளிபெற்று, தனது செயற்பாடுகளில் அசையா உறுதி கொண்டு, விலை மதிக்க முடியாத வைரமாக வாழ்ந்தவர்.

தனது வாழ்வாலும், வாக்காலும் வைரச் சுடராக ஒளிர்ந்த உத்தமரது நினைவுகளைப் போற்றுவோம். அவர்காட்டிய பாதையில் நடைபயில்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நெஞ்சை நிமிர்த்தி நேர்நின்ற பெருந்தமிழன்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

திருவும், நற்கல்வியதும் சேர்ந்தபுகழ் காங்கேயன்
துறைவாழ்ந்த தம்பையர், தூய திருக் கரம்பற்றி,
இருபாலை லட்சுமியார் இல்லறத்தில் இணைந்திடவே,
உருவானார் சின்னத் துரையென்ற உயர்புகழோன்.

அஞ்சாது தலைநகரில் அசையாது பொருளீட்டி,
நெஞ்சை நிமிர்த்தி நேர்நின்ற பெருந்தமிழன்.
தஞ்சமென வந்தோரைத் தாங்கித் துணைசெய்து,
விஞ்சுபுகழ்கொண்டே விளங்கிய நற்கொடையாளி.

காந்தி மகான் தன்னைக் கருத்திருத்தி எந்நாளும்,
சாந்தி தனை வேண்டிச் சரித்திரமாய் வாழ்ந்த மகன்.
வேந்தர்களும் இவர்தம்மை வேண்டி உறவாக்கி,
போந்தனர்கள் என்றால் புகழுரைக்க வல்லோமோ?

கதராடை கட்டித் தன் கல்யாணத் தினத்தன்றும்
உதராது கொள்கையினை ஓங்கி உரைத்த மகன்.
சிதறாத சிந்தையதால் சீரெல்லாம் தனதாக்கி,
நிதமும் புகழ்சேர்த்த நீள்புகழோன் நெறியாளன்.

அச்சகத்தில் நாட்காட்டி அடித்துலகுக் கதைக்காட்டி
இச்சகத்தில் இவர்க்கு நிகர் இல்லையென வாழ்ந்த மகன்.
உச்சமதில் புகழ்கொண்டு உயர்ந்தோங்கி நின்ற மகன்.
எச்சமெலாம் தனையேத்த எழுச்சி பல செய்த மகன்.

சிந்தனைச் சிற்பச் செல்வரெனப் பாராட்டி,
வந்தனை செய்துலகு வாழ்த்தியது அவர்தம்மை.
கந்தனை நிகர்த்த நற்காளையரைப் பெற்றெடுத்து
முந்து புகழ்கொண்டான் முன்னைத்தவம் கொண்டான்.

கோயில் திருப்பணியும் குன்றாத அறப்பணியும்,
வாயில் வந்தார்க்கு வழங்குகிற கொடைப்பணியும்,
தேயம் சிறக்க செய்தமகன் தெய்வமதாய்,
ஆயினவாம் தன்னை அவனியெல்லாம் வணங்கிடவே!

நூற்றாண்டு தன்னை நும்மக்கள் கொண்டாடி,
ஆற்றாத தம் அன்பை அவனிக்குரைத்தார்கள்.
வேற்றார்கள் கூட விரும்பும் நற்பண்பாளன்.
ஊற்றாகிப் பிள்ளைகளின் உயிரிற் கலந்தனனாம்.

தாதைதனைப்போற்றி தனி அன்பைத் தாம் சொரிந்து,
சாதனைகள் செய்கின்ற தம் புதல்வர் விழாவெடுத்தார்.
ஓதித்தம் தந்தைபுகழ் ஓங்கி உலகறிய,
சாதித்தார் அவர்தம்மை சகமெல்லாம் வாழ்த்துதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிந்தனைச் சிற்பச் செல்வர்” ச.த.சின்னத்துரை
# 100வது ஜனன தினம்

ந. மன்மதராஜன்
அதிபர் – கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானை.

இயற்கை தந்த எழிலினால்
இறைவன் வந்து குடிகொள்ள
சைவத்தின் பழமையுடன்
தழைத்து நிற்கும்
காங்கேசன் துறையினிலே
வாழையடி வாழையாக
சைவமொடு புகழ்சேர்த்த
செம்மையான குடும்பத்தில்
தம்பையா அவர்களும்
இலட்சுமி அம்மையாரும்
**23.07.1903** இலே
ஈன்றெடுத்த இணையற்ற
செல்வமே சின்னத்துரை.

அன்னாரின் செயல்களினை
அளவின்றிக் கண்டுகொண்டு
அவற்றினிலே சிலவற்றை
செப்பியே சென்றிடுவோம்.

இளைஞரான சின்னத்துரை
காந்தியத்தில் ஈடுபட்டு
கதர் இயக்க பாவனையில்
“தேசபந்து சங்கம்” ஆரம்பித்து
சிறப்புடனே நடாத்திவந்தார்.

நூல்நூற்று கதராடை அணிந்து
காந்தியத்தை பரப்பி வந்து
கதர்த்திருமணம் செய்து கொண்ட
“காந்தி சின்னத்துரை” காந்தியத்
திற்கு ஓர் எடுத்துக்காட்டல்லோ.

தான் பெற்ற அறிவினாலும்
சிந்தித்து செயலாற்றி
ஆராய்ச்சி பல செய்து
அவையெல்லாம் தொகுத்தெடுத்த
அரியதொரு வெளியீடே
அன்னாரின் “லீலா பஞ்சாங்கக் கலண்டர்”

இனமென்ற பிரிவின்றி
இணைபிரியா நண்பர்களாய்
இலங்கையின் பிரதமராயிருந்த
பிரேமதாசாவுடன் நட்புற்று
சிங்கள எழுத்தாளருடனும்
பௌத்தத்தின் குருமாருடனும்
கொண்டிருந்த அன்னாரின்
உறவு இன்பகரமானது.

ஆலயப் பணிகளிலே
தலைவராக இருந்து
திருப்பணி பலபுரிந்து
திருக்கோயில் பலகாத்த
புண்ணிய மனிதரான
சின்னத்துரை அவர்களுக்கு
காஞ்சிபுர ஆதீன
ஞானப்பிரகாச சுவாமியளித்த
அரிய பட்டமே
“சிந்தனைச் சிற்பச் செல்வர்”.

அயராத உழைப்பினாலும்
தவறாத நேர்மையினாலும்
சமாதான நீதிவானாய்
அகவை எழுபத்தாறினிலே.

எம்மை விட்டு இறைவனடி சேர்ந்த
சிந்தனைச் சிற்பச் செல்வர்
சின்னத்துரை அவர்களின்

*நூற்றாண்டு ஜனன இத்தினத்திலே ஆத்மா சாந்தி பெற நாமும் பிரார்த்திப்போம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

FOUNDED IN 1902

**VIVEKANANDA SOCIETY**

"AN APPROVED CHARITY"

"அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம்"



SWAMI VIVEKANANDA

Our Ref.:
எமது இல.:

34, Vivekananda Hill,
Colombo - 13.
Telephone : 422646

---

# மனித நேயம் படைத்தவர் காந்தி சின்னத்துரை

சின்னத்துரை ஐயா அவர்களை நான் முதன் முறையாக கப்பித்தாவத்தை ஆலய முந்தலிலே ஆ. சின்னத்தம்பி ஐயா அவர்களோடு சந்தித்தேன். அவருடைய புன்முறுவல் பூத்த முகம் என்னைக் கவர்ந்தது. அவர்கள் இருவரையும் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தமையால், கோயில் வழிபாட்டிற்குச் சென்ற நான், அவர்களைக் கண்டதும் சற்று தாமதித்து அவர்களோடு உரையாடிவிட்டுச் சென்றேன். அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள் என்பதை அறிவேன். ஆலய சம்பந்தமாகவோ அல்லது சமய விடயங்கள் சம்பந்தமாகவோ நாம் கண்டிப்பாக இவர்கள் இருவரையும் சந்திக்க நேரிடும். சின்னத்துரை ஐயாவைக் கண்டதுமே லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் எம் மனக் கண்முன் தோன்றும். ஒரு சமையம் கதிர்காமத்திற்கு நான் வழிபடச் சென்றபோது அங்கேயும் அவர்களைச் சந்தித்தேன். அங்கும் அவர்கள் சித்திரக் கலண்டர்களை இலவசமாக அன்பர்களுக்கு விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள்.

திரு. சின்னத்துரை அவர்கள் சமய சம்பந்தமான விடயங்களில் மிகவும் துடிதுடிப்பு மிக்கவராய்க் காணப்பட்டார். அவர் நல்ல மனிதநேயம் படைத்தவராக வாழ்ந்த பெரியாராவர். வர்த்தகத் துறையில் சிறந்து விளங்கிய போதிலும் மகாத்மா காந்தி தொடக்கி வைத்த "கதர் இயக்கத்திலே" மிக ஈடுபாடுடையவராக இருந்தமையினால் இவரைக் "காந்தி சின்னத்துரை" என்றும் அழைப்பர்.

சமய சம்பந்தமான நூல்களை வெளியிடுவதற்காகவே ஆரம்பத்தில் "நியூ லீலா" அச்சகத்தை அமைத்தார். இன்றும் அவ்வச்சகம் மெசஞ்சர் வீதியில் நான்கு மாடிக் கட்டிடத்தில் இயங்கி வருவதை யாவரும் அறிவர். விவேகானந்த சபை கூட இவ்வச்சகத்தில் அன்றும், இன்றும் சபையின் பிரசுரங்களை அச்சேற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். எமது சபையின் சீவிய கால அங்கத்தவராக காந்தி சின்னத்துரை அவர்கள் இருந்து தொண்டாற்றியுள்ளார். "தந்தை எவ்வழியோ மைந்தரும் அவ்வழியே" என்ற கூற்றுக்கிணங்க சின்னத்துரை ஐயா அவர்களின் புதல்வர்களான திரு. எஸ். அருளானந்தன், திரு. எஸ். தனபாலா இருவருமே எமது சபையின் ஆயுட்கால அங்கத்தவராக இருந்து சமயத்தொண்டாற்றி வருவது போற்றத்தக்கதாகும். திருவாளர் சின்னத்துரை ஐயா அவர்களின் சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் அவர்களுடைய நாமத்தை இன்றும், என்றும் நிலைத்திருக்கச் செய்யும். அன்னாரது நூற்றாண்டு விழாவிற்கு எனது வாழ்த்துக்கள்.

"சிவஞானச் செல்வர்" க. இராஜபுவனீஸ்வரன்

கௌரவ பொதுச் செயலாளர் – விவேகானந்த சபை, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை வீரர் சின்னத்துரை

"சிந்தனைச் சிற்பச் செல்வர்" அமரர் ச.த. சின்னத்துரை ஜே.பீ. அவர்களின் 100வது ஜனன விழா- 2003 நினைவு கூரும் இச் சந்தர்ப்பத்தில் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை இந்த சிறப்புச் செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

எமது சபையினைப் பொறுத்தமட்டில் சின்னத்துரை ஐயா ஒரு மைல் கல். எமது சபைக்கும், கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தானத்துக்கும் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. எமது சபையின் ஆயுட்கால உறுப்பினராக ஏறத்தாழ அரை நூற்றாண்டுகள் இருந்து, சில சகாப்தங்களாக துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து தன்நலன் கருதாது சேவை செய்த மாமனிதர்.

எமது சபையின் கொழும்பு, மாத்தறை திருக்கேதீஸ்வர மடாலயங்களைத் திறம்பட நடைபெறுவதற்கு அவர் ஆற்றிய தொண்டுகள், பணிகள் சொற்களுக்கு அப்பாற்பட்டது. அந்த வகையில் அமரர் ஆற்றிய பணிகளை அவரின் புதல்வர் திரு. ச.த.சி. அருளாநந்தன் J.P. அவர்கள் எமது சபைத் தலைவராக இருந்து சேவை செய்து வருகின்றார் என்பதை இவ்விடத்தில் கூறுவது சாலச்சிறந்தது. 1983 இனக் கலவரங்களின் பின்பு கதிர்காம கந்தன் தேவஸ்தானத்தின் முகப்பில் இருந்த ஓம் வடிவம் அகற்றப்பட்டிருந்ததை யாவரும் அறிவர். இந்த ஓம் வடிவத்தை சென்ற வருடம், தேவஸ்தானத்தின் வளாகத்தில் திரும்பவும் பல கஷ்டங்களின் மத்தியில் வடிவமைத்தவர் அமரரின் தனையன். அப்படி தந்தையின் வழிநின்று சேவை புரியும் மகனை எமது சபைக்கு தொண்டாற்றும்படி விட்டுச் சென்றிருக்கின்றார் அமரர் அவர்கள்.

அமரர் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் அப்பிரதேசக் கோவில்களுக்கும், தொண்டர் நிறுவனங்களுக்கும் சேவைகள் பல செய்த பெருந்தகை. அடியேன் காங்கேசன்துறை இந்து வாலிபர் சங்க இணைச் செயலாளராக 1965ம் ஆண்டு இருந்த கால கட்டத்தில், அமரர் அவர்கள் எமது சங்கத்துக்கு பல விதத்திலும் உதவிகள் புரிந்தார்கள் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டவனாகின்றேன்.

தலைநகரில் இந்துக்களின் அடையாளத்தை வலுப்படுத்த அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கு ஒரு கட்டிடம் அமைய வேண்டும் என்று பல வகையிலும் முயன்றவர் அமரரவர்கள். ஆனாலும் அவரது கால கட்டத்தில் இது நிறைவேற்றப்படாதது கவலையை அளித்தாலும், அவரது தனையனும் எமது சபையின் தர்மகர்த்தாக்களில் ஒருவருமான திரு. சி. தனபாலா ஜே.பீ. அவர்கள் மாமன்றத்தின் கட்டிடக் குழு தலைவராக இருந்த காலத்தில் தலைநகரின் மையப்பகுதியில் 5 மாடிக்கட்டடம் ஒன்று உருவாகியிருப்பதன் மூலம் அவர் ஆசை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அமரரவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் கோட்பாட்டில் அசையாத நம்பிக்கையும், இனங்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் பல வகையிலும் நிருபித்தவர்கள். அவர் சைவ சமயத்துக்கு மட்டுமன்றி புத்த சமயத்து விகாரைகள் அமைப்பதிலும், பன்சலை வேலைகளைப்பொறுப்பேற்று நடத்தியும் மற்றைய மதங்களையும் மிகவும் பக்தி சிரத்தையுடனும் மதிப்பளித்து வந்த பெருந்தகை.

மொத்தத்தில் அமரரவர்கள் ஒரு "பல்கலைக் கழகம்" என்று சொன்னால் அது மிகை இல்லை. அன்னார் விட்டுச் சென்ற சேவைகளை சின்னத்துரை குடும்பம், தலைவன் வழி நின்று சேவையாற்றி வருவது போற்றுதற்குரியது.

அமரர் சின்னத்துரையின் நாமம் எப்பொழுதும் நிலைத்து இருக்கவேண்டும் என்றும் அவரது 100வது ஜனன நினைவு தினத்தையொட்டி வெளியிடப்பட இருக்கும் மலர் செவ்வனே அமைய எல்லாம்வல்ல கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் அருள் பாலிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

சி. சிவஞானம் ஜே.பீ.
பொது செயலாளர்
கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை.
கொழும்பு - 10.

**03.07.2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Virakesari

**Express Newspapers (Ceylon) Limited**

185, GRANDPASS ROAD, COLOMBO-14, SRI-LANKA
P.O. BOX 160. PHONE 320881 (3 LINES). CABLES "VIRAKESARI" FAX 448205

# புகழ் நீடித்து நிலைக்கட்டும்

லீலா வர்த்தக நிறுவனங்களின் ஸ்தாபகர், சிந்தனைச் சிற்பச் செல்வர் அமரர் ச. த. சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டுவிழா மலருக்கு இச்செய்தியை விடுப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

வர்த்தக உலகில் மிகச்சிறப்புற்று விளங்கிய சின்னத்துரை அவர்கள், பரோபகார சிந்தை கொண்டவராய் பல தர்ம காரியங்களுக்கு வாரி வழங்கிய தர்மவான். அனைவருடனும் அன்புடன் பழகும் இயல்பினரான அவர், பிறரின் இன்னல்களைக் கண்டு உதவும் பண்பினராக விளங்கினார்.

அத்துடன் தெய்வபக்தி மிகுந்த திரு. சின்னத்துரை, கொழும்பு கப்பித்தாவத்தை கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் தலைவராக இருந்தும் ஏனைய பொது அமைப்புக்களின் மூலமும் செய்த சேவைகள் அளப்பரியன. பண்பாகவும், அன்பாகவும் பழகும் சுபாவம் கொண்ட அவர் தன்மை இன்றும் எம் இதயத்தில் உள்ளது.

அவர் புகழ் நீடூழி நிலைத்து நிற்கவேண்டும்.

பிரதம ஆசிரியர்,
வீரகேசரி.
**02.07.2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியத்தின் காவலன் தம்பையா சின்னத்துரை அவர்களின் ஜனன தினப்பிரார்த்தனை

ஆசிரியர், மாணவர்
கொழும்பு இந்துக் கல்லூரி

தமிழீழ தன்னகரில் தமிழ்த்தாயின் புதல்வனென
தரணியிலே வந்துதித்த தம்பையா சின்னத்துரை
அவனியிலே அவதரித்து ஆண்டு நூறு கழிந்திடினும்
ஐயா உன் நினைவலைகள் என்றும்
நீங்காது நிலைத்திருக்கும் எம் தமிழர் நெஞ்சங்களில்
பாங்குடனே உம்மைப் போற்றுகிறோம்
ஓங்கி வளர்ந்த உன்புகழை நாம் கூற
ஒரு கோடி வார்த்தைகள் போதாது ஐயா.

**1903** இல் அவதரித்தவர் சின்னத்துரை. இவர் தமிழையும் சமயத்தையும் இரு கண்ணெனப் போற்றி கருத்துணர்ந்து கற்ற வித்தகர். இல்லறவாழ்வின் துணையாக இலங்குகின்ற வெண்மதியாம் சௌபாக்கியத்தைக் கரம் பிடித்து கருத்தொருமித்து வாழ்ந்தவர். தன்னலங்கருதாது உழைக்கும் தனிப்பெரும் செல்வமுடையவர். தலை நகர் தன்னில் தமிழனை தலை நிமிர்ந்து மிடுக்குடனே வாழ வழி வகுத்த திண்ணிய மனமுடையான். ஈழத்து காந்தி என எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த இணையற்ற அன்புடையான். மனிதப்பண்பின் இலக்கணமென இலங்குகின்ற இலங்கை மாதாவின் தவப்புதல்வன். இன மத பேதமின்றி எல்லோருடனும் அன்பு பாராட்டிய அற்புத மனித நேயன்.

தான் செய்த சேவைக்கு சிகரம் வைத்தது போல் "தேசபந்து சங்கம்" அமைத்து சிறப்புடனே வழிநடத்தி சீர் பொருந்திய "செஞ்சொற் செல்வன்" என்ற பட்டம் பெற்ற பெருந்தகை தமிழர் நெஞ்சில் நீங்கா இடம்பெற்ற நீதியாளன்.

வள்ளுவன் காட்டிய வழியில் வாழ்ந்த சின்னத்துரை தான் செய்த தவத்தின் பயனாக தசப்புத்திராகளை இத் தரணிக்கு தந்தார். சட்டங்காக்கும் சாத்வீகப்பணிக்கு சுந்தரமும், வையகம் போற்றும் வைத்தியத்துறைக்கு சோமசுந்தரமும், செந்தமிழையும் தொன்மைமிகு சைவத்தையும் செம்மையுடன் காக்க கதிர்காமத்தொண்டில் அருளானந்தத்தையும், தன் தொழில் காக்க தேசபந்துடனே லோக நாதனையும், தமிழர்களின் துயர்துடைக்கும் தொண்டாற்றும் தோழனென தனபாலாவையும் தனித்துவமிக்க பொறியியலாளர் பணிக்கு சொக்கநாதனையும் தன்குடும்பம் காக்க கடைக்குட்டி ரவியையும் ஈன்றெடுத்த பெரும் பேறு உடையான்.

பூத்து பொலிவு பெற்ற தாமரையே – நீ
பூமியில் வந்துதித்து ஆண்டு நூறு ஆனாலும்
இறவாப் புகழுடனே எம் நெஞ்சங்களில் வாழும் –உன்
ஆத்மா சாந்தி பெற அனைவருமே பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட சென் செபஸ்ரியன் மேட்டில் இருந்த அமரரின் அச்சகத்தின் முன்புறம்.



கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை கூட்டம் ஒன்றில் அமரர் அவர்கள் உரையாற்றுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் தாயாரின் நினைவு தினத்தில் கொழும்பிலிருந்து பங்குபற்றச் சென்ற
'லீலா பிறஸ்' ஊழியர்களும் குடும்பத்தினரும் காங்கேசன்துறை வீட்டின் முன்பாக. (24-09-1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தின் முன்னோடியாக வாழ்ந்த சின்னத்துரை ஐயா

ஐ. தி. சம்பந்தன்

இணைப்புச் செயலாளர் - இந்து சமய விவகார அமைச்சு.

அச்சகத் தொழிலால் இலங்கையிலுள்ள அனைத்து இனமக்களையும் ஒன்றிணைத்து தன்தொழிலோடு சமய சமூகப் பணியாற்றி மறைந்துவிட்ட சிந்தனைச் செல்வர் திரு. எஸ். சின்னத்துரை ஐயாவின் நூறாவது ஆண்டு பிறந்தநாள் சிறப்புடன் நினைவு கூரப்படுகிறது.

அச்சகத்துறையில் 60 வருடத்திற்கு மேலாக அனுபவம் பெற்ற லீலா சின்னத்துரை என்று அழைக்கப்படும் இப் பெரியார் பல்துறையிலும் சேவையாற்றி வந்தார்.

அச்சகத் தொழில் மிகப் புனிதமான ஒரு தொழில். அதை எவ்வாறு பயன் படுத்துகின்றோம் என்பதில்தான் அதன் மகத்துவம் தங்கியுள்ளது. சிந்தனை மிக்க சின்னத்துரை ஐயா அவர்கள் அதைச்சரியாக பயன்படுத்தினார். அவர் சிந்தனையில் உருவெடுத்த லீலா சித்திரக் கலண்டர் ஒரு வரலாற்று ஆவணமாக வளர்ந்துள்ளது. தமிழ், சிங்களம் இருமொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கும் இக்கலண்டர்கள் சின்னத்துரை ஐயாவை என்றும் நினைவு கூறிக்கொண்டிருக்கும்.

இவர் ஒரு சிங்கள மகனாக இருந்திருந்தால் திரு. டி. ஆர். விஜயவர்த்தனா ஆரம்பித்த ஏரிக்கரை நிறுவனம் போல் வளர்ந்து இலங்கையில் பிரபல்யமான பல செய்திப் பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனமாக திகழ்ந்திருக்கலாம். இலங்கையின் சுதந்திரத்திற்குப்பின் இத்துறையில் தமிழர்கள் உயர் நிலை அடைவது கடினமாகவிருந்தது. எனினும் சின்னத்துரை ஐயாவின் சிந்தனைத்திறனால் தமிழ், சிங்கள மக்களின் ஆதரவை லீலா அச்சகம் மூலம் தேடிக் கொண்டார்.

கொழும்பில் மலிபன் வீதியில் சிறு அச்சுக்கூடமாக ஆரம்பிக்கப்பட்டு, சென் செபஸ்டியன் வீதிக்கு மாற்றப்பட்டு அரசியல் தலையீட்டினால் அந்த இடம் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டபோது, அவரது இல்லம் அச்சுக்கூடமாக மாறியது. அதன் பின்னர் கொழும்பு-12, மெசஞ்சர் வீதியில் ஒரு விருட்சமாக நிலை ஊன்டியது. சின்னத்துரை ஐயாவின் இதயம் போல் இதன் வளர்ச்சி.

### *தமிழ், சிங்கள மக்களின் நல்லுறவு*

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள பெரும் மனிதராக இருந்தபடியால், தமது தொழில் நிலையத்தை பெரும் நெருக்கடியிலும் சோரவிடாது வளர்த்துவந்தார். தெய்வத்துணையும் அவருக்கிருந்தது.

தெய்வீக நம்பிக்கை கொண்ட இவர் கப்பியாவத்தை விநாயகரிடம் முழு நம்பிக்கை வைத்திருந்தார். அதை தமது குலதெய்வமாக வழிபட்டு வந்தார். பல இன்னல்கள், இடர்ப்பாடுகள் வந்தபோது தமக்கு துணை நின்ற தெய்வம் கப்பியாவத்தை விநாயகர் என்று கூறுவார். தெய்வத்தை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டவர்.

### *பிரேமதாசாவின் நட்புறவு*

வாழைத் தோட்டத்தில் வளர்ந்த பிரேமதாசா சின்னத்துரை ஐயாவின் நெருங்கிய கூட்டாளி. சின்னவயதிலிருந்து இவரது அச்சுக் கூடத்திற்கு சென்று அச்சிடும் வேலைகள் செய்விப்பவர். சின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலிலிருந்து ஜனாதிபதியாக வரும்வரை திரு. சின்னத்துரை ஐயாவின் தொடர்பை வளர்த்து வந்தவர். எந்தப் பிரச்சினையிலும் சின்னத்துரை ஐயாவுக்கு கைகொடுக்கத் தவறுவதில்லை. அதேபோன்று திரு. சின்னத்துரை அவர்கள் லீலா அச்சகம் மூலம் அவரது அரசியல் வாழ்வுக்கு உறுதுணை புரிந்தவர்.

## *பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறவாதவர்*

மும்மொழிகளிலும் அச்சிடும் வேலை செய்யும் சாதனங்களை ஏற்படுத்திக் கொண்ட லீலா அச்சகம் மூவின மக்களின் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட அச்சகமாக விளங்கியது.

சிங்கள மக்களுடன் நெருக்கமாக இருந்த திரு. சின்னத்துரை ஐயா அவர்கள் பெற்றதாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறவாது தமிழ் இனத்தின் விடுதலைக்கும் பெரும் பணி ஆற்றியுள்ளார். இங்குதான் இவருடைய பெருந் தன்மையும் தமிழ் இனத்தின் மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் துலாம்பரமாக தென்படுகிறது.

## *தந்தை செல்வாமீது பற்றுக் கொண்டவர்*

திரு. சின்னத்துரை அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்தவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் காங்கேசன் துறைத் தொகுதியைச் சேர்ந்தவர்.

தந்தை செல்வாவின் அரசியல் பணிகளுக்கு உதவ ஆர்வம் கொண்ட சின்னத்துரை ஐயா அவர்கள் என்னை தந்தை செல்வாவுக்கும் தனக்கும் ஒரு இணைப்புப் பாலமாக பயன்படுத்தினார். என்னுடைய அரசியல் ஈடுபாட்டை நன்கு விளங்கிக் கொண்டதாலும் லீலா அச்சகத்தோடு **1964**ம் ஆண்டிலிருந்து எனக்கு ஏற்பட்ட தொடர்பினால் என்மீது நம்பிக்கை வைத்தார்.

**1965**ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவு நல்கவேண்டும் என்று என்னுடன் மனம் விட்டுப் பேசுவார். சின்னத்துரை ஐயா அவர்கள் தந்தை செல்வாவுக்கு கொடுத்த ஆதரவு அளப்பரியது.

**1970** ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தந்தை செல்வாவை ஆதரித்து தனது சிந்தனைத் திறனால் தயாரித்த சுவரொட்டி விளம்பரமும் பெரும் ஆதரவைத் திரட்டியதோடு, தமிழ் மக்களின் சிந்தனைகளைத் திசை திருப்ப வழிவகுத்தது.

இது போன்று பல வெளியீடுகளை இலவசமாக அச்சிட்டு தமிழர்களின் போராட்டத்திற்கு பெரும் ஆதரவளித்த தமிழ் பற்றாளனாக விளங்கியவர் திரு. சின்னத்துரை அவர்கள்.

## *கவிஞர் காசி ஆனந்தனின் தமிழ்ப்பணிக்கு ஆதரவு*

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் தமிழ்ப் பணிகளுக்கு பெரும் ஆதரவு நல்கி வந்த திரு. சின்னத்துரை ஐயா அவர்கள் அவரது நூல்களை இலவசமாக வெளியிட்டு ஊக்கமளித்தார். **1972**ம் ஆண்டு இலங்கை அரசியல் சட்டத்தை எதிர்த்தும், சிங்களம் மட்டும் சட்டத்திற்கு அடிபணியாது தமது மொழிபெயர்ப்பாளர் பதவியை உதறித் தள்ளிவிட்டு வெறும் கையுடன் வெளியேறிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் நிதி நிலைமோசமாக இருந்தது. அவருக்கு உதவுவதற்கு "காசி ஆனந்தன் அவை" ஒன்றை உருவாக்கி நிதி திரட்ட முழுமையாக ஆதரவு நல்கியதோடு அந்த அவையின் தலைவராக செயற்பட முன்வந்தார். இந்த அவையில் திரு. செ. சந்திரகாசன் பொருளாளராகவும், திரு. ஐ. தி. சம்பந்தன் செயலாளராகவும், திரு. ரகுபதி பாலசிறீதரன் உறுப்பினராகவும் செயற்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972ல் காசி ஆனந்தன் அவர்கள் மன்னாரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அக்காலகட்டத்தில் அவரது குடும்பத்துக்கு இந்தக் குழுவினால் திரட்டப்படும் நிதி மாதந்தோறும் அனுப்பப்பட்டு வந்தது. தமிழர்களின் விடுதலைக்காக தியாகம் செய்யும் குடும்பம் வறுமையால் வாடக்கூடாது என்ற சிந்தனை கொண்டவர் திரு. சின்னத்துரை ஐயா அவர்கள்.

## *சமயத்துறை*

சமயத்தில் மிகுந்த பற்றுக்கொண்ட திரு. சின்னத்துரை அவர்கள் கப்பியாவத்தை பால செல்வ விநாயகரை தமது குல தெய்வமாக வழிபட்டு வந்தார். இந்த ஆலயத்திருப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். 1936ம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தில் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இவர் மறையும்வரையும் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டு வந்தார். பல ஆலயங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாது ஒரு தெய்வத்தையே உறுதியாகப் பிடித்துக் கொண்டார். தமது குடும்பத்தையும் பிள்ளைகளையும் இவ்வாலயத்தின் வழிபாட்டாளராக்கினார்.

குடும்ப நிகழ்வுகள், திருமணங்கள் யாவும் இவ்வாலயத்தில் நடத்தி வந்தார். வினைதீர்க்கும் விநாயகப் பெருமான் அவரது குடும்பத்திற்கு விக்கினம் ஏற்படாது பாதுகாத்து வந்தார். அவரது குடும்பச் சிறப்புக்கும் பிள்ளைகளின் கல்வி உயர்வுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் விநாயகப் பெருமானின் கருணை இருந்தது என்று கூறுவார். சமயம் சார் நூல்கள், மலர்கள் வெளியிடுவதற்கு லீலா அச்சகத்தில் முதன்மை கொடுத்து வந்தார். இதை அறிந்து 1975ம் ஆண்டு எமது ஊர் கோவில் காரைநகர் திக்கரை முருகனின் குடமுழுக்கு விழா மலர் அச்சிடுவதற்கு லீலா அச்சகத்திற்கு சென்றோம். மிக ஆர்வத்துடன் அப்பணியை செய்ய முன்வந்தார். அவர் மனம் வைத்துச் செய்தபடியால் திக்கரை முருகன் குடமுழுக்கு விழா மலர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக வெளிவந்தது.

## *நிறைந்த பிள்ளைப்பாக்கியம்*

மனம்போல் வாழ்வு என்பார்கள். நல்ல உள்ளமும் தூய சிந்தனையும் கொண்ட திரு. சின்னத்துரை ஐயா அவர்களுக்கு நிறைவான 9 ஆண்பிள்ளைகள். பெண் குழந்தைகள் இல்லை என்ற கவலையை அவருக்கு மருமக்களாக வந்தவர்கள் நீக்கினார்கள். எல்லோரையும் தமது பிள்ளைகளாக நேசிப்பவர். பிள்ளைகளைப் பெற்றெடுத்த அவரது துணைவியார் ஒரு பெண் தெய்வம் என்றே கூற வேண்டும். அமைதி அடக்கம் பொறுமை படைத்த திருமகள். அந்த மகாலட்சுமியே திரு. சின்னத்துரை ஐயாவின் உயர்ச்சிக்கு சக்தித் தெய்வமாக விளங்கியது. ஆண் பிள்ளைகளை அடக்கமாக வளர்ந்து அறிவுள்ளவர்களாவும் வர்த்தக வல்லமை உடையவர்களாகவும் வளர்த்தெடுத்த பெருமை பெற்றோருக்குண்டு.

பிள்ளைகளும் சகல துறைகளிலும் மேம்பாடு பெற்றவர்களாக விளங்கிய போதிலும் அதனால் அகங்காரமோ தற்பெருமையோ கொண்டிராத பெரும் மனிதராக வாழ்ந்தார். அதனால் அவரது பிள்ளைகளின் வாழ்க்கையும் பொலிவுபெற்றது.

## *தந்தை வழியில் பிள்ளைகள்*

தந்தையைப் போல் பிள்ளைகள் அவ்வழியில் பிரகாசிப்பதில்லை. ஆனால் சில குடும்பங்களுக்கு அவ்வரலாறு உண்டு. அதை சின்னத்துரை ஐயாவின் குடும்பத்தில் காணக்கூடியதாகவிருந்தது. தந்தை வழி சென்று அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடரும் பாக்கியசாலிகளாக அவர்களது பிள்ளைகள் வாழ்ந்து வருகின்றார்கள். தந்தைக்கு இருந்த வசதியையும் வாய்ப்பையும் பயன்படுத்தி ஆண்பிள்ளைகள் திசைமாறிச் சென்றிருக்கலாம். ஆனால் திரு. சின்னத்துரை ஐயாவின் வழிகாட்டல் அவர்களைப் பண்பாளர்களாக ஆகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் வாழும் டாக்டர் சோம சேகரம் வைத்தியத்துறையிலிருந்தாலும், சமய சமூகப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றார். இவருடன் நான் நெருங்கிப் பழகியிருக்கின்றேன். தந்தையின் அரும் பெரும் குணங்களை அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. நான் **1990**ம் ஆண்டு இலண்டன் வந்த போது அவருடைய தொடர்பு அதிகமாக இருந்தது. இலண்டன் லூசியம் சிவன் கோவில் நிருவாகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தார். வேற்று நாட்டு சூழலில் வாழ்ந்தாலும் தந்தை ஊட்டிய சமயப்பற்றுக் காரணமாக தெய்வீகப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் பணிகளில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். இலண்டனில் **250** க்கு மேற்பட்ட தமிழ் டாக்டர்களின் சங்கத்தில் **(Medical Institute of Tamils)** என்ற அமைப்பின் தலைவராகவும் முக்கிய நிருவாகியாகவும் பணியாற்றிய காலத்தில் ஈழத்தில் அல்லற்படும் மக்கள் துயர் துடைக்க அந்த அமைப்பு மூலம் பெரும் நிதிதிரட்டி உதவிய பெருமை இவருக்கு உண்டு.

நான் **1990** ல் இலண்டன் சென்றவுடன் **"Tamil Who? Who?"** "தமிழர்கள் யார்? யார்?" என்ற தமிழ் அறிஞர்களின் விபரக் களஞ்சியம் ஒன்றை வெளியிட உருவாக்கிய **(Centre for International Tamil Affairs)** சர்வதேச தமிழர் விவகார நிலையம் என்ற அமைப்பின் தலைவராகவிருந்து அந்தவெளியீட்டை வெளிக்கொண்டுவர அரும்பாடுபட்டார். பல அறிஞர்களை ஒன்று திரட்டி இந்த அமைப்பபை உருவாக்கி முன்னின்று உழைத்தவர்.

இதேபோல் இலங்கையில் வாழும் திரு. சின்னத்துரை ஐயாவின் புதல்வர்கள் சமய, சமூக பணிகளில் ஈடுபடுவது போற்றத்தக்கது.

இலங்கையில் வாழ்ந்து வரும் திரு. தனபாலா திரு. அருளானந்தம் ஆகியோர். கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியர் கோவில் கோபுரப்பணி, கப்பியாவத்தை விநாயகர் கோவில், கதிர்காம யாத்திரிகர் மடம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு தந்தை போல் அப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்புடன் நடைபெற இவ்விருவரும் மாநாட்டு நிருவாகக் குழுவிலிருந்து பெரும் பணியாற்றினார்கள்.

இது தவிர திரு. தனபாலா அவர்களின் விடாமுயற்சியினால் இன்று நந்திக் கொடி இந்து சைவ உலகின் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நான் இந்து சமய விவகார அமைச்சின் இணைப்பச் செயலாளராக பதவி ஏற்றபோது இந்த நந்திக் கொடியை இந்து சமய விவகார அமைச்சு பொறுப்பேற்று சைவ உலகின் தேசியக் கொடியாக அங்கீகரிக்க திரு. தனபாலா எடுத்து வந்த முயற்சி பாராட்டத்தக்கது. செல்வம் படைத்த குடும்பங்களில் குடும்பப்பாரம்பரியம் சிதறிப் போயிருக்கும் இக்காலகட்டத்தில் சின்னத்துரை ஐயாவின் குடும்பம் அந்தப் பாரம்பரியத்தைப் பேணி தந்தை வழி செல்வதை அவர்களது தந்தையாரின் நூற்றாண்டு பிறந்த நாளில் நினைவு கூர்வது சாலப் பொருத்தமானதே.

"சிந்தனைச் சிற்பச் செல்வர் சின்னத்துரை ஐயா சமுதாயத்தின் ஒரு முன்னோடியாக வாழ்ந்து நல்ல வாழ்க்கை நெறிகளைப் புகட்டிச் சென்றுள்ளார்" அவர் நாமம் என்றும் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "லீலா சின்னத்துரையர் ஒரு தனிமனித சகாப்தம்"

(பொன் பாலசுந்தரம், இலண்டன்)

சின்னத்துரை ஐயா அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தனிமனித சகாப்த நாயகன்.

அவரின் அடிச்சுவட்டில் ஈழத்தமிழர்களில் ஒரு சிறுதுளியினர் நடைபோட்டிருந்தால் அது சிறுதுளி பெருவெள்ளமாகி இலங்கையின் மத்திய மாகாணம் தமிழர்களின் கோட்டையாகி கொழும்பும் தமிழர்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கும்.

அரசாங்க நிர்வாகத்தில் அந்தக்காலத்தில் ஆழ்வாப்பிள்ளையும், மாணிக்க இடைக்காடரும், ஸ்ரீகாந்தாவும், சேர் கந்தையா வைத்தியநாதனும் எப்படிக் கோலோச்சினார்களோ அதேபோல இந்தச் சின்னத்துரை ஐயாவும் கொழும்பு புறக்கோட்டை வர்த்தக வலயத்துக்குள் பலராலும் மதிக்கப்பட்ட வர்த்தகப் பிரமுகராக இருந்தார்.

சின்னத்துரை ஐயா அவர்களின் காலத்தை முந்திய காலம் எனக் கூறலாம். அந்தக்காலத்தில் தமிழர்கள் கொழும்புக்கு வரவும், தயக்கமின்றித் தொழில்களை ஆரம்பிக்கவும் அத்திவாரம் அமைத்துக் கொடுத்த சில தமிழர்களில் இவர் ஒரு அசல் யாழ்ப்பாணத்தான் என்று கூறலாம். இவரைப்போல முன் – பின் வந்தவர்கள் இருக்கிறார்கள். ஐந்து முச்சந்தியில் பிரபல்ய வர்த்தகராக விளங்கிய எஸ். கே. தம்பிப்பிள்ளை, கொழும்பில் முதலாவது உயரமான ரைம்ஸ் கட்டடத்தை அமைத்த சங்கரப்பிள்ளை, செனட்டர் நீதிராசா, ஸினிமாஸ் கே. குணரத்தினம், மாணிக்கம், சண்முகம் போன்றோர் சின்னத்துரை ஐயா அவர்களின் சமகாலத்தவர்கள்.

திரு. சின்னத்துரை அவர்களின் அடிச்சுவடு அந்தக்காலகட்டத்தில் எங்கு பதிய வேண்டியிருந்ததோ அங்கு நன்றாக ஸ்திரமாகப் பதிந்துவிட்டது. அதனால் இன்றும்கூட அவர் ஆரம்பித்து வைத்த வர்த்தகத்தின் வளர்ச்சியையும், லீலா சித்திரக் தினக்காட்டி மூலம் மேற்கொண்ட தமிழ்–சைவத் தொண்டும், மருதானையிலுள்ள ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயிலின் வளர்ச்சிகு நாற்பது வருடங்களுக்கு மேலாக தம்மை அர்ப்பணித்ததும் இவர் தொண்டின் அணிகலன்கள். நெஞ்சில் நிலைகொண்டுள்ள நினைவுச் சின்னங்கள்.

எனது பார்வையில் சின்னத்துரை ஐயா அவர்கள் – தூய வெள்ளை வேஷ்டி, வெள்ளை நாஷனல், அள்ளிப்போட்ட சால்வை, நெற்றியில் நீறு, வரவேற்கும் மலர்ந்த சிரிப்பு, சரளமான பேச்சு, வேகம், விறுவிறுப்பும் இருக்கும், எறும்பின் சுறுசுறுப்பு, ஓயாத உழைப்பு, எடுத்ததை சாதிக்கும் திறமை, சிந்தித்துச் செயல்படும் திறன், இப்படி இன்னும் பல அரிய குணங்களுக்கு இவர் உரிமையாளர்.

இனி – சிறந்த என்று சொல்வதிலும் பார்க்க புதுமைச் சிந்தனையாளர் என்று இவரைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். செய்யும் தொழிலில் மாற்றங்களை விரும்புவதைப்போல போட்டிபோட்டு முன்னேறுவதிலும் கெட்டிக்காரர். எதையும் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்படுபவர். வர்த்தக தந்திரத்தில் இன்று உலக நாடுகள் அனுஷ்டிக்கும் வாடிக்கையாளர்களைத் திருப்திப் படுத்தும் அணுகுமுறையை இவர் பல வருடங்களுக்கு முன்னரே செயற்படுத்த ஆரம்பித்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

உதாரணம் – லீலா சித்திர நாட்காட்டியாகும். தமிழையும், சைவத்தையும், ஆன்மீக போதனைகளையும், தினமும் காலையில் மனதைத் தூய்மைப்படுத்தும் நற்சிந்தனைகளையும் அள்ளி வழங்கும் அறிவுக் களஞ்சியமாக வெளியிட்டது ஒன்றே போதும்.

சின்னத்துரை ஐயா அவர்கள் அமரராகி 23 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், லீலா பிரபல்யம்வாய்ந்த லீலாவாக வளர்ந்திருக்கிறதென்றால் ஐயா அவர்களுக்கிருந்த எதிர்காலப்பார்வை தான் காரணம்.

நான் வீரகேசரியில் பணியாற்றிய காலம் ஞாபகம் வருகிறது. அடிக்கடி இவரைச் சந்திப்பதும் தொலைபேசியில் தொடர்பு கொள்வதும் உண்டு. ஊரில் நடைபெறும் அவ்வளவு விஷயங்களும் எனக்கு மிகச் சுலபமாகக் கிடைத்துவிடும். அவைகளில் சில பத்திரிகைச் செய்தியாகவும் மலர்வதுண்டு. நான் பத்தி (Column) எழுத்தாளராக இருந்து நாட்டில் உலாவும் கிசு, கிசுக்களைப்பற்றி எழுதிய காலத்தில் ஐயா அவர்கள் அடிக்கடி பல திரை மறைவுச் செய்திகளை என் காதில் போட்டு பரபரப்பு ஏற்படுத்தியதும் உண்டு.

திரு. சின்னத்துரை அவர்களுக்கு வர்த்தக வட்டாரத்தில் எவ்வளவு அறிமுகங்கள் இருந்தனவோ அவ்வளவு அறிமுகம் அரசியலிலும் இருந்தது.

சிறந்த கடவுள் பக்தர். அதிசிறந்த தொண்டர். மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் இவரை வழிநடத்திய குலதெய்வமாகும். 45 வருடங்களுக்கு மேலாக இந்த ஆலயத்துடன் தமது சேவையை பதித்துக் கொண்டவர்.

இந்த விநாயகர் மிகவும் பழமைவாய்ந்தவர். 1790ம் ஆண்டிலிருந்து அருள்பாலிப்பவர். 1814ம் ஆண்டில் முத்தையா முதலியார் என்பவர் சிவன் பூதப்பர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் இருக்கிறது. இடையிட்டு ஆலயத்துக்கான இரண்டு ஏக்கர் காணியில் அத்துமீறிக் குடியேறி ஆக்கிரமிப்புச் செய்தவர்களை அங்கிருந்து வெளியேற்றி ஆலயத்துக்கு காணியை பெறுவதற்குத் நீதிமன்றம்வரை சென்றவர். அதில் வெற்றிகண்டவர்.

இவையெல்லாம் ஒருவர் ஆற்றிய சேவைக்கு நிலைத்திருக்கும் சரித்திரச் சான்றுகள். அத்தாட்சிப்பத்திரங்கள். ஆலயப் பணிநிறை மனதுக்குப் பஞ்சாமிர்தம்.

வாழ்க்கையைப் பல கோணங்களில் புடம்போட்டு அதற்கமைய வாழ்ந்தவர் இவர். இப்படியான பெருமைக்குரியவர்களை அவர்கள் வாழும்போதே கௌரவித்திருக்கவேண்டும். அப்போதுதான் நமது சமுதாயம் விழிப்படையும். எம்மத்தியில் இப்பழக்கம் உருவானால் திரு. சின்னத்துரை ஐயா போன்றவர்களை மக்களின் வாழ்த்துக்கள் இன்னும் பல காலம் வாழ வைத்திருக்கும்.

படாடோபமற்ற சின்னத்துரை ஐயா அவர்களின் வாழ்க்கை எமது சமுதாய இளம் தலைமுறையினரின் ஒரு அடிச்சுவடாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TRIBUTE TO A MAN OF THE PEOPLE

*It is difficult for me to imagine that "Leela Sinnadurai" as he was affectionately addressed by his numberless friends would be 100 years old now had he been living.*

*"Leela" was the name he gave to his numerous business concerns Leela Press, Leela Engineering works, Leela Stores, Leela Panchangar Calendars both in Tamil and Sinhala etc.*

*He was known as "Gandhi" Sinnadurai in his birth place of KKS. for his following of the Mahathma and for his simple life style. Money and Positions did not spoil him or change his habit. He was always in his spotless white "National" Whenever he held a function at his residence there were the so called elite and the ordinary seated next to each other.*

*Had he been living today he would have been shedding tears. The first tear would have been for the passing away of his second son, the loving Balendra Attorney-at-law, the other would have been for the death of president Premadasa a close friend who was always in and out of Sinnadhurai Aiya's house. Above all there would have been a stream of tears for the plight of our people in the North East and the rest of the country.*

*He was indeed a quiet politician a "Federalist" at heart at that time but did not want to contest any seat. I know his opinion on various matters were sought by politicians of various colours. Pershps it was only at New Leela Press at that time one could see the propaganda materials of the UNP, SLFP and the TULF being printed under one roof.*

*I had known the man closely from the fifties when I was Deputy General Secretary of the G. C.S.U. After the ethnic riots he was one of those who pressured me to leave the post of Assessor Inland Revenue and avail my services to organisations from where I could contribute towards the struggle of our people. That is way I am deeply indebted to him.*

*As much as he belongs to all those many sons, daughters-in law, grandchildren and great grand sons assembled to pay homage, he also belongs to all of us. He died a happy man Perhaps his only sorrow was he was unable to accept the challenge of his beloved wife "Soupakiyam" and have a daughter of his own in the midst of nine sons.*

*May his soul be at the best of Lord Shiva Forever.*

***V. Vijaysingham***
***AGOTIC***
*25 Mathias House,*
*Epsom, Surtey*
*KT18 7RX*
*U.K.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாச் சபையின் செய்தி

உயிர்கள் தாம் செய்த நன்மை தீமைக்கு ஏற்பவே பிறப்பெடுத்து வாழ்கின்றனர். எவரையும் யாரும் விரும்பிப் பெற்றதில்லை. ஆனால் பெற்று வளர்க்க யார் வழி வகுத்தது. ஒருவரை ஒருவர் இணைந்து வாழ வந்தவழி எப்படி? எல்லாம் வல்ல இறைவனே இவ்வண்ணம் உதவுகிறார் என்றே சமயங்கள் சொல்கின்றன.

ஒரு மேசையை நாம் பார்க்கின்றோம். மேசைக்கு பலகை தேவை. அதைச் செய்வதற்கு ஒருவர் தேவை. உருவங்களை அமைப்பதற்கு கருவிகளும் தேவை. இப்படியே அனைத்துப் பொருட்களும் ஆக்கப்படுகின்றன என்பதை நாம் அறிகின்றோம்.

உலகம் உருண்டையானது. தன்னைத் தானே சுற்றிக்கொள்கின்றது. உலகைப் போலே வெட்ட வெளியிலே பல்வேறு அண்டங்கள் இருப்பதை அறிஞர் சொல்லுகின்றனர். உலகத்தில் மனிதர்களுடன் பிராணிகள், ஊர்வன, பறப்பன, செடி கொடிகளும் இருப்பதை நாங்கள் உணர்கிறோம் அல்லவா!

விஞ்ஞானிகளும், ஆன்மீகர்களும் இன்றும் அண்டசராசரங்களின் தோற்றம், மறைவு என்பவற்றை ஆய்வு செய்து கொண்டே இருக்கின்றனர். முடிந்த முடிவுகளை தத்தம் ஆய்வுக்கு ஏற்பக் குறித்து வருவதை அறிவோம்.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியர் எவ்வண்ணம் சேர்கின்றனர். அவர்களுக்கு பிறக்கும் குழந்தையை யாரும் விரும்பி அமைத்தனரா? அனைத்து குடும்பத்தவருக்கும் பிள்ளைப் பாக்கியம் உண்டா? அதுதான் சொல்வதற்கு இல்லை. பெற்றார், பிள்ளைகள் இவர்களின் இவ்வுலக வருகை எப்படியோ வந்துவிட்டது.

பல்வேறு சமய ஞானிகளும் இன்று வாழ்வை ஆராய்ந்து வருகின்றார்களே! வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்றும் கூறப்படுவதையும் நாம் அறியாமல் இல்லை.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி
நாலாறுமாதமாய் குயவனைவேண்டி
கொண்டுவந்தான் ஒருதோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என்ற பாட்டைப் பார்த்து நாம் எதை அறிகின்றோம்.

"ஐந்து கல்லால் ஒரு கோட்டை
அந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்"

இது எங்கள் உடலின் அமைப்பைக் குறிக்கிறதாக உணர்கிறோம் அன்றோ!

இன்று உலகில் மிக்க சிறப்புடன் வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களைப் போற்றுகின்றோம். இத்தகைய போற்றுதல்களை உரியவர் எங்கிருந்து பார்க்கின்றார். யாரும் சொல்ல முடியுமா? இத்தனை சிந்தனைகளும் ஏன் என்றா கேட்கின்றீர்கள்!

"லீலா ஸ்ரோர்ஸ்" முதலான பல ஸ்தாபனங்களை ஆக்கி நல்ல குடும்பமாக புத்திரர்களைப் பெற்று வாழ்ந்த திரு ச. த. சின்னத்துரை அவர்களின் நூற்றாண்டு விழா தரும் பாடம் என்ன? நிலையற்ற உலகத்தில் வாழ்ந்தாலும் கூட வாழ்வதற்கு ஏற்ற வகை இருந்தது. அப்படியே வாழ்வார் அனைவரும் சிந்தித்து நல்லவர்களாக வாழ வேண்டும் என்பதை உணர்ந்து நடந்து கொள்வதற்காக அல்லவா!

நாம் கண்டபடி நாம் நினைத்து மனம் போனபடி நடவாது ஆன்மீக ஆராய்வை ஏற்று அனைவரும் வாழ வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகின்றது அல்லவா!

**இவ்விழா மலருக்கு ஆசிச் செய்திகள், கட்டுரைகள் தந்துதவிய சமய ஆசாரியர்களுக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் எம்முடன் இணைந்து இவ்விழாவினை நடாத்திய அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கும் மற்றும் எமது அழைப்பினை ஏற்று பெரும் தொகையில் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றிய பெருமக்கள் எல்லோருக்கும், சின்னத்துரை குடும்பத்தினர் சார்பாகவும் எமது சார்பாகவும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**வ. நடராசா**
செயலாளர்,
**சின்னத்துரை 100வது ஜனன விழா - 2003 சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PAYING TRIBUTE

"A leader of his people, unsupported by any outward authority: a politician whose success rests not upon craft nor the mastery of technical devices, but simply on the convincing power of his personality; a victorious fighter who has always scorned the use of force; a man of wisdom and humility, armed with resolve and inflexible consistency, who has devoted all his strength to the uplifting of his people and the betterment of their lot; a man who has confronted the brutality of Europe with the dignity of the simple being, and thus at all times risen superior.

Generations to come, it may be, will scarce believe that such a one as this ever in flesh and blood walked upon this earth."

**Albert Einstein on Gandhi**

When we look at Aiyah / Mama / Appu's life we find ourselves proud that we knew a man who easily fits into the shoes of great men. We are prouder that we can call such a man our Father ("Aiyah") / Father -in-law ("Mama") and Grand Father ("Appu").

Tributes have been paid to him by many including by ourselves. Here are sameplers:

"அந்தக் காலத்திலேதான் மகாத்துமா காந்தி அவர்கள் தொடக்கி நடாத்தி வந்த "காதர் இயக்கம்" இந்தியாவில் மட்டுமன்றி. இலங்கையிலும் துரிதமாகப் பரவத் தொடங்கியது. துடிதுடிப்பு மிக்கவராய் விளங்கிய திரு. சின்னத்துரை அவர்களுக்கு அந்த இயக்கம் தனிப்பட்ட ஓர் ஈடுபாட்டினை உண்டாக்கிற்று. அந்தக் காலத்தில் அரசியலிலும் பத்திரிகைத்துறையிலும் பெரும்பணியாற்றிக் கொண்டிருந்த திரு. கோ. நடேசையர் அவர்களுடனும், அன்பர் பூபதிதாசர் முதலியவர்களுடனும் சேர்ந்து இந்திய காங்கிரஸ் இயக்கத்தினை இலங்கையிலே ஆரம்பித்தார்கள். அந்த இயக்க அலுவலகம் புறக்கோட்டையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் "தேசபந்து சங்கம்" என்னும் பெயருடன் இயங்கத் தொடங்கிற்று. அந்த இயக்க வளர்ச்சியில் மிருந்த ஈடுபாடு காட்டி அயராது உழைத்து வந்ததுடன், வெள்ளம்பிட்டியில் வாழ்ந்துகொண்டிருந்த விஜயவர்த்தனா அவர்களின் ஒத்துழைப்புடன் நூல் நூற்று, கதராடைகள் உற்பத்தி செய்யவும் தொடங்கி எல்?லோராலும் "காந்தி சின்னத்துரை எனப் போற்றப்பட்டு வந்தார் . இன்றும் யாழ்ப்பாணப் பகுதியில் அவர்களைப்பற்றிக் குறிப்பிடுபவர்கள் "காந்தி சின்னத்துரை" என்றே சொல்வார்கள். அக் காலம் தொடங்கி இக் "காந்தி சின்னத்துரை" கதராடைகளையே உடுக்கத் தொடங்கினார். அந்தப் பழக்கம் அவரை என்றும் விட்டு நீங்கவில்லை. காங்கேசன்துறையிலும், நூல் நூற்கவும் ஆடைகள் நெசவு செய்யவும் ஊரவரை அவர் ஊக்கியதும் அக் காலத்திலேயே ஆகும். ஊரிலே "காந்தியார்" எனப்பட்டார்."

• • •

*"He sacrificed so much for us. He started his life with limited education, virtually without any money and built his business with his hard work of 12 to 16 hours a day, unit his death. All because he wanted to provide a better life for his children."*

• • •

*"My memories of Appu are vivid. He used to sit out in the shade every weekend drenched in oil. From time to time he would bring toys from Leela Stores. Everyday he would sit on his chair outside and drink tea. I used to enjoy sitting on his lap to sip his plain tea and eat banana. I loved his company."*

• • •

"பொன்றுந் தனையும் புகழ்" என்பார்கள்,
"பொன்றிய பின்னும் நிற்கும் புகழ்" இது !
"சிந்தனைச் சிற்பச் செல்வர் திரு. சண்முகம் தம்பையா சின்னத்துரை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சின்னத்துரை அவர்களின் வாழ்க்கையிலேயே ஒரு சிகரம் வைத்தாற் போன்றது, அவர்கள் காஞ்சீபுர ஆதீனத்தைச் சேர்ந்த திருப்பெருந்திரு. ஞானப்பிரகாச சுசாமிகளவர்களுடன் தொடர்புகொண்டமையாகும். சுவாமிகள், கொழும்பு –பம்பலப்பிட்டி – சரஸ்வதி மண்டபத்தில் மூன்று நாட்கள் நடாத்திய திருமுறை விழாவினைத் திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்களும். ஆசிரியர் திரு. நல்லையா அவர்களும், திரு. சின்னத்துரை அவர்ளும் ஒழுங்குசெய்து முன்னின்று நடாத்தினார்கள். அந்த அரிய விழாவினைத் தொடர்ந்து, பம்பலப்பிட்டி, ஹெயிக் வீதி, ஸ்ரீ முத்துச்சுவாமி ரெட்டியார் அவர்களது இல்லத்திலே நடாத்தப்பட்ட "சிவஞான சித்தியார் வகுப்பு" க்கும் திரு. சின்னத்துரை அவர்களே மூலகாரணர் ஆவார். ஈழத் "திருநெறி மன் றம்" கூட அவர்களது முயற்சியாலேயே தொடங்கப்பட்டதாகும்.

திரு. சின்னத்துரை அவர்களின் சிந்தனைகள் மலர்வதையும், மலர்ச்சியால் அவர்கள் வெளியிட்ட "லீலா பஞ்சாங்கச் சித்திரக் கலண்டர் நாட்காடடி" யையும் திருப்பெருந்திரு. ஞானப் பிரகாச சுவாமிகள் கண்டதும், அவர்களுக்கு – "சிந்தனைச் சிற்பச் செல்வர்" எனப் பட்டம் சூட்டிப் போற்றினார்கள்; புகழ்ந்தார்கள். அவர்களைப்போலவே "லீலா பஞ்சாங்க சித்தரக் கலண்டர் நாட்காட்டி" யைப்பாராட்டியவர்கள் எத்தனையோ பேர்!

• • •

*"He was a wonderful organiser. When a grandchild was born he would have a mini-meeting of all the Daughters-in-law and make up a daily rota as to who should be taking all meals for the new mother: who should keep company during the day and who stays with the mother and baby at nights at the hospital."*

• • •

*"It is a life long regret that we had only little time with them, especially Appu, unlike our elder cousins who were more forunate. But even those few years were a source of joy to us and we will cherish them all our lives."*

• • •

"திரு. ச.த. சின்னத்துரை அவர்களின் பூதவுடல், மக்கள் அஞ்சலிக்காக, பண்டாரநாயக வீதியிலுள்ள அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டது. இலங்கையின் சனாதிபதியான அதி யுத்தமர், திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா, இலங்கைப் பிரதமர் மதிதகு. திரு. ஆர். பிரேமதாசா, எதிர்க்கட்சித் தலைவர், திரு. அ. அமிர்தலிங்கம், அமைச்சர் மதிதகு. திரு. எஸ். தொண்டமான் முதலாக, அமைச்சர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், திருமதி. சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களின் சார்பில் திரு. அநுரா பண்டாரநாயகா ஆதியானோரும், தமிழ்த்தலைவர்களும், சைவக் குருமாரும் தொழிற் சமாச உறுப்பினர்களும், குடும்ப நண்பர்களுமாக மூன்று நாட்கள் வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்கலி செலுத்தினார்கள். பௌத்த குருமாரும், கிறிஸ்தவக் குருமாரும் பலர் வந்து அஞ்சலி செய்தமையைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

இலங்கை ஒனிபரப்புக் கூட்டுத்தாபனமே, நிகழ்ச்சி ஒலி பரப்பின் பின்னதாக, சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் திரு. சின்னத்துரை அவர்களின் மாட்சியும் தொண்டும்பற்றிச் சிறப்புப் பேச்சுக்களை ஒலிபரப்பியது. "

• • •

*"Oh! I knew your Grandfather" / "I knew your Father" / "I know your Uncle" / "Your Family helped me.." / "Oh! Yes, I remember Leela Press" - these are statements that I hear every so often. Yes! Our family has made its mark on Sri Lankan society and will definitely continue to do so and I am sure that our mark have slowly begun to appear wherever a 'Sinnadurai' has made his or her Home."*

• • •

To us the greatest tribute to the memory of the leader of our family on this his 100th Birth Anniversary, was the overwhelming contributions to this souvenir and the assistance extended to us by Associations, friends and well-wishers in organizing the commemorative event on 13th July 2003 .

We want to formally thank each and every one of them and the All Ceylon Hindu Congress from the bottom of our hearts for this.

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

*Sinnadurai family*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகோ "மங்கள ராமய" பன்சாலையில் அமரர் ச. த. சின்னத்துரை அவர்களின் ஞாபகார்தமாக மண்டபம் ஒன்றிற்கு அமரரின் புத்திரர்களால் அடிக்கல் நாட்டும் காட்சி.



அமரர் அவர்களின் கனிஷ்ட புதல்வன் ரவீந்திரன் "பசுவதை" எதிர்ப்பு தினத்தில் பசு ஒன்றை விடுதலை செய்து வெள்ளவத்தை பன்சலைக்கு அன்பளிக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லீலா சித்திரக் கலண்டர் யாழ்ப்பாணத்தில் அமோக வளர்ச்சி - **1974**ம் ஆண்டு.



அமரரின் புத்திரர்களும் மருமக்களும்



அமரரின் பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் புத்திரர்களில் ஒருவரின் விவாக வைபவத்தின் போது திருவாளர்கள் எஸ். தொண்டமான், தந்தை செல்வா, வின்சன் பெரேரா, பீற்றர் கெனமன் ஆகியோர் – 1973ம் ஆண்டு.



புதல்வர் டாக்டர் சோமசேகரம் அவர்களின் விவாக வைபவத்தின் போது அமரர் தனது குடும்பத்தினருடன் - 1973ம் ஆண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் புதல்வன் திரு. லோகநாதனின் திருமண வைபவத்தின் போது
தனது பாரியாருடனும் ஏனைய எண் சகோதரர்களுடனும்.



அமரரவர்களின் புத்திரர்கள் எண்மர் 2000ல் எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் புதல்வன் – பொறியியலாளர் சொக்கநாதன் அவர்களுடன்
அமரரும் பாரியாரும் காணப்படுகின்றார்கள்.



சட்டத்தரணிகளான இரு புதல்வர்களுடன் அமரர் காணப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கதிர்காம யாதிரிகர் தொண்டர் சபையின் கொழும்பு மடாலய நுழைவாயிலின் தோற்றம்
அமரர் அவர்களின் சமய, சமூக பணிக்கு இச் சபை முக்கிய பங்காற்றி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# "ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

## என்று வாழ்ந்த தீர்க்கதரிசி







Design By Ratne Fine Graphic, , Tel: 075-362189 - 583873 Printing By : Leela Press (Pvt) Ltd. Tel: 325930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org